681

3...1915

பூமிதிருத்தியை அபிவிருத்தி

OR

A HELP TO THE

LANDLORD

வெங்கடராம ஐயர் (பதி)

1915

X:322 0j8
N15
67723

681
3-1915 உ

ஸ்ரீ ராமஜெயம்.

# ஆஸ்திதியை ஆளும்வழி

OR

# A HELP TO THE LANDLORD.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
AUG 1915
MADRAS

By

*T. K. Venkatarama Iyer*

PALLIAGRAHARAM,

TANJORE.

[Rights Reserved] 1915. [Price: As. 8

67733

PRINTED AT THE
THARA PRESS, TANJORE.
Copies—1000.

1124

3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
AUG 1915

உ

ஸ்ரீராமஜெயம்

# முகவுரை

இச்சென்னை இராஜதானியில் எ[illegible] அநேக பிரபுக்கள், பெரியசர்க்கார் உத்தியோகத்திலும், வக்கில், வியாபாரமுதலியவைகளிலும், லெஜிஸ்லேடிவ்கவுன்ஸில் மெம்பர், (Legislative Council) டிஸ்டிரிக்டு போர்டு, தாலூகாபோர்டு, மெம்பர், கமிட்டி மெம்பர், ட்ரஸ்டி, முனிசிபல்சேர்மென், கவுன்சிலர் முதலிய அநேகவிதமான இதரவேலைகளிலும் அமர்ந்து அவ்வேலைகளின் தொந்தரவினால் கவனிக்கமுடியாமலோ, அலக்ஷியத்தினாலோ தங்கள் சொந்த பூஸ்திதிகளின் பெருமையை மறந்துவிடுகிறார்கள். ஆனால்சிலர் மட்டும் தங்கள் பூமிகளை நேரில் கவனித்து விர்த்திசெய்து, பலனடைந்துவருவதுடன், மேற்கண்ட உத்தியோகமுதலியவைகளையும் கௌரவத்திற்காகவோ திரவியாபேக்ஷையினாலோ, தேகசுறுசுறுப்பின் பேரிலோ அவ்வேலைகளில் இச்சைவைத்துப்பார்த்துவருகிறார்கள்.

சிலர்பாலியத்தில் படிப்புவிர்த்தியினால்உத்தியோகங்கள் மேன்மேல் உயர்ந்து, அவ்வுத்தியோகங்களில் இச்சைவைத்தோ, பொதுஜனங்களின் நன்மதிப்பினாலோ, அரசாங்கத்தாரின் பிரீதியினாலோ, சிற்றரசர்களின் விஸ்வாசத்தினாலோதங்கள் பூஸ்திதிகளைக்காட்டிலும் மிகுதியானஸ்திதிகளுக்கு எஜமானஸ்தானத்தை வகித்து அவைகளுக்குச் சட்டங்களும் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளும், அசாமிகளும் மற்றும் அநேகவிதசௌகரியங்களும் இருப்பதைக்கொண்டு, சீராகவும் ஒழுங்காகவும் தங்களுடைய

உத்தியோகங்களை நடத்திவருகிறார்கள். அத்துடன் அவர்கள் "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்றபடி தங்களுடையபூமிகளையும் பூர்வானுபவத்தையும் நவீனமுறையையும் ஏற்றபடி அனுசரித்துக்கவனித்துப்பார்த்தால் ஏராளமான இலாபம் அடையலாம்.

இதரவேலைத்தொந்தரவில்லாத சுகவாசிகளான சிலர், தங்கள் பூமிகளைக் கொஞ்சமேனும்கவனிக்காமல், ஏஜெண்டுகளை நியமித்து அவர்கள் சொல்லுகிறபடி நடந்துவருவதில் அவ்வேஜெண்டுகளின்விசுவாசத்தினால் மேன்மேலும் விர்த்தியடைகிறார்கள். சிலரோ அவ்வேஜெண்டுகளின் மோசநடவடிக்கைகளினால் நாளுக்குநாள் வருமானம் குறைந்து கடைசியில் உண்மையுணர்ந்துவருந்துகிறார்கள்.

சிலர்தாங்கள் பெரியகுடும்பத்தில் பிறந்தவர்கள் என்றும் அவர்களுடைய வேலைகளைக்காரியஸ்தர்களைக்கொண்டு பார்த்தல் சரியென்றும் எண்ணினும், அக்காரியஸ்தர்களுக்குப் பூராவாய் அதிகாரம் கொடுக்காமல் ஒவ்வொரு வேலைகளுக்கும் எஜமானரின் உத்திரவை எதிர்பார்க்கும்படி செய்வதில் அக்காரியஸ்தருக்கு கேட்டபடி உத்தரவு கொடுத்தால் என்னசெய்துவிடுவாரோவென்றுபயந்து தாங்களே நேரில்செய்ய அனுபவமில்லையே என்று வருந்தி அதனால் அச்சமுண்டாகிக்கடைசியில் பொருள் நஷ்டத்திற்கிடமுண்டாகிறது.

சிலர்தன்னைப்பெரியபிரபுவென்று ஜனங்கள்நினைக்கும்பொருட்டு வரும்படி விர்த்தியின்றிக் கௌரவத்திற்காக ஏராளமான செலவுகளைச்செய்து நாளுக்குநாள் கடனதிகரித்து, முடிவில் கடன்கொடுத்தவர்கள் நடவடிக்கைகளால் பிதுரார்ச்சிதமான பூமி





யை இழக்கிறார்கள். அவர்கள்தங்களுடையடம்பச்செலவிற்குவேண்டியபணத்திற்காக எவ்வளவு கவலையும், தந்திரமும், புத்திபுக்திகளும், எடுத்துமுயற்சி செய்கிறார்களோ அதில் ஒருபாகம்தங்கள்நிலங்களின்வருமானத்தை விர்த்திசெய்யச்சிரமப்பட்டிருந்திருப்பார்களேயானால் ஜாஸ்தியான கடன்களினால் நிர்ப்பந்தப்பட்டுப் பிதுரார்ச்சிதசொத்துக்களை இழந்திருக்கவேண்டியதில்லை.

சிலர் ஏராளமான பொருளைச் சம்பாதித்துவைத்து அதன் பலனைத்தான் அனுபவியாமல் சிசுக்களையும் சிறுபெண்சாதிகளையும் விட்டுத் தங்களுடையவும் தங்கள்மனைவி குழந்தைகளுடையவும் துர்அதிர்ஷ்டத்தினால் எமனுக்கிரையாகிறார்கள். அவர்கள் இறந்த மறுதினமே அச்சிறுபெண்சாதிகளுக்குப்பர்த்தா இறந்த துக்கத்தைக்காட்டிலும் பதின்மடங்கு குடும்பத்தை எவ்விதம் நடத்துகிறதென்றகவலையுண்டாகித்தங்கள் குழந்தைகள் பெரியவர்களாகி அனுபவசாலிகளாகிறபரியந்தம் சிறுபெண்சாதிகளே குடும்பத்தைவகிக்கவேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்குப் பூமியைஆளும்படியானவிஷயத்தில் அனுபவமில்லாததால் ஒருவரிடம் நம்பித்தான்தங்கள் குடும்பத்தை ஒப்புவிக்க வேண்டியிருக்கிறது.

இப்பதியிழந்தமனைவிகள் சுவல்ப படிப்புள்ளவர்களாயின் இப்புஸ்தகம் போன்ற நூல்களைத்தாங்களே படித்துத்தெரிந்தும் படிப்பில்லாதவர்களாயின் பிறரைப்படிக்கச்செய்து கேட்டுத்தெரிந்தும், அம்முறைப்படிகாரியஸ்தர்கள் முதலானவர்களை நியமித்து அதிகநஷ்டமில்லாமல் கூடியவரையில் ஒழுங்காய்நடைபெறச்செய்துகொள்ளலாம்.

மற்றும் சிலர் மட்டும் தங்கள் பூமியிலேயே பாடுபட்டு ஏராளமான வரும்படிகளை அடைந்து தேகஉழைப்பினால் சரீரசௌக்கியமும் வரும்படியினால் சந்தோஷமும் அடைந்து சுகப்படுகிறார்கள்.

உத்தியோகசம்பளங்களிலிருந்தும், வியாபார முதலிய தொழில்களிலிருந்தும், மிச்சப் படுத்துகிறவர்கள் தங்கள் வருமானங்களைப் பாங்கி, (Bank) பண்டு, (Fund) முதலியவைகளில் போடுவதைப்பார்க்கிலும் தங்களுடைய சொந்த பூமிகளில் அவைகளைச் செலவழித்து அப்பூமிகளை விர்த்திக்குக் கொண்டுவந்தால் தாங்கள் அதிகஇலாபத்தை அடைவதுடன் விவசாயநூல்கற்றவர்களுக்கு உத்தியோகமும் ஏழைகளுக்குச் சீவனமார்க்கமும் கிடைக்கிறதுடன் தாங்களும் சுகமடைவார்கள்.

பூஸ்திதியுள்ள ஒவ்வொருவரும் தங்களுக்குள்ள இதரவேலைகளைப்பார்க்கிலும் "தொழுதூண்சுவையின் உழுதூண்இனிது" என்றபடி தங்களுடைய பூமிகளை நேரில்பார்த்துப் பண்படுத்துவது அவசியம். அப்படி சௌகரியப்படாமலிருக்கிற பெரிய உத்தியோகஸ்தர்கள் தங்கள் பூஸ்திதிக்கும் வருமானத்திற்கும் தகுந்தபடி உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தியும் அவசியமானால் விவசாயபள்ளிக்கூடமுதலியவைகளிலிருந்து படித்தவர்களைத்தருவித்தும் வேண்டிய சம்பளங்களைக் கொடுத்துப்பிரயாசைப்பட்டு நிலங்களைப்பண்படச்செய்தும், தாங்களும்ஒவ்வொருதினத்திலும் பத்துநிமிஷமாவது குடும்பவிஷயங்களை நேரிலோதபால் மூலமாகவோ கவனித்து அதற்கும் சாவகாசமில்லாதபக்ஷத்தில்ஓய்வுநாட்களிலாவது அவசியம்கவனித்து நேரிலும்பார்த்தால் அதிகசௌகரியம் அவர்களுக்குக்கிடைக்கும்.



ஆகையால், மேற்கண்ட விஷயங்கள் முடியவரையில் செவ்வையாக நடைபெற வேண்டியதற்காகப், பெரிய மிராசுதாரர்களுக்கும், அவர்களுடைய ஏஜெண்டுகள் முதலியஒவ்வொருவருக்கும் உபயோகப்படுமென்றுநான் என்னுடைய அநுபவத்தில்கண்ட விஷயங்களை இச்சிறுபுத்தகமூலமாய்த் தெரிவித்துக் கொள்ளலானேன். இதில் ஏதாவது குறைகள்காணப்படின் அவைகளை விடுத்து அம்ஸபட்சியைப்போல் சாராம்சங்களை மட்டும் கிரகித்து என் தவறுதல்களையும் அவசியமான சீர்திருத்தங்களையும் எனக்குத்தெரிவித்து இச்சிறுபுஸ்தகத்தை ஆதரிக்க வேணுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

"குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்தமாந்தர் கடன்"

எனது சின்னநுபவத்தால் நலமெனக்கண்ட வற்றை உலகத்தோர்க்குப்பயன்படுத்தவேண்டுமென்னும் அவாமிகுதியால் என் சிற்றறிவுக்கெட்டியபடி எழுதப்பட்ட இச்சிறுநூலை பிழைதிருத்தம்செய்து கொடுத்த பூண்டிக்கடுத்தமேல மாகாணம் வித்வான் மகாள-ள-ஸ்ரீ இராமசாமிவன்னியரவர்கட்கு என்றும்மறவா நன்றி பாராட்டுங்கடப்பாடுடையேன்.

PALLIAGRAHARAM,
TANJORE.

T. R. Venkatarama Iyer

# பொருளடக்கம். (Contents)

முதற்பிரிவு


1 வது. அத்தியாயம் மிராசுதாரர்கள் அனுசரிக்கவேண்டிய பொதுவிதிகள்... ... ... 1

2 வது. ஷை சிப்பந்திகள். ... ... 9

3 வது ஷை குத்தகைக்கு அடைக்கவேண்டியநிலங்கள். 14

4 வது ஷை பண்ணைசாகுபடி ... ... ... 16

5 வது ஷை கட்டிடங்கள் ... ... ... 20


இரண்டாவது பிரிவு


1 வது அத்தியாயம் குடும்பசிப்பந்திகளின் வேலைகள் ... 23

2 வது ஷை கிராமசிப்பந்திகளின் வேலைகள் ... 33


மூன்றாவது பிரிவு


1 வது அத்தியாயம் குத்தகைதாரர்களும் அவர்கள் நடவடிக்கைகளும் ... ... 56

2 வது ஷை புன்செய் பகுதி (தோப்பு உள்பட) ... 67

வாரசாகுபடி ... ... ... 70


நான்காவதுபிரிவு


ஜமீன்கிராமங்கள் ... ... ... 72


ஸ்ரீ ராமஜயம்

# பூஸ்திதியை ஆளும்வழி.

## 1-வது அத்தியாயம்.

## மிராசுதாரர்கள் அனுசரிக்கவேண்டிய பொதுவிதிகள்.

ஒவ்வொரு மிராசுதாரரும் அவர்களுக்கு இருக்கப்பட்ட பூஸ்திதிகள் முதலிய எல்லாவித ஆஸ்திகளையும், அவைகளின் தற்கால வருமானங்களையும், சீர்திருத்திப் பண்படுத்தி விருத்தி செய்தால் கிடைக்கக்கூடிய வருமானங்களையும், குடும்பச்செலவு, கிராமச்செலவு, எதிர்பாராத அதிகச்செலவு, கடன், வட்டி முதலிய விபரங்களையும் முதலில் நன்றாய் கவனிக்கவேண்டும்.

நிலங்களை கவனிக்குமுன் இருப்பிடம், கூடியவரையில் விபரமான பெயர் அல்லது அடையாளம், நன்செய் புன்செய், தீர்வை, காலக்கிரைய மதிப்பு, வருமானம் முதலியவைகளைப் பார்க்கவேண்டும்.

குடும்பச்செலவில் கவனிக்கவேண்டிய அம்சங்கள் [illegible]ட்டங்கள் அவசியமானபடியால், அவைகளை வருமானத்திற்குத் தக்கபடியும், பழமைக்கப்படியும், செலவழிப்பதில் மிராசுதாரர்கள் காலத்தையும், தேசாசாரத்தையும் கொஞ்சம் அனுசரிக்கவேண்டும்.

வரவு.

(a) கிராம வரவு பகுதி உள்பட (கிராமச் செலவுகள் போக)
(b) வாடகை வருமானம்
(c) சம்பளம் அல்லது தொழில்
(d) சீர்திருத்தத்தினால் கிடைத்த லாபம்
(e) இதர பாப்த்துக்கள்

செலவு

(a) கிஸ்தி
(b) இதரவரி (இன்கம்டாக்ஸ் முனிசிபாலிட்டி முதலியன)
(c) சிப்பந்திகள்
(d) குடும்பச்செலவு
1 சாப்பாட்டுச்செலவு
2. ஜவுளிகள்
3. படிப்பு
4. ரயில் சார்ஜு வகையரா
5. வழக்கமான விசேஷங்கள்.
(e) தர்மச்செலவு
(f) சீர்திருத்தங்கள்
(g) கல்யாண முதலிய எதிர்பாராத அதிகச்செலவுகள்.
(h) கோர்ட்டுச்செலவு (கூடியவரையில் குறைக்கவேண்டும்)
(i) சில்லரைச்செலவு (சொந்தச்செலவு உள்பட)
(j) கடன் வட்டி.

கிராமங்களிலிருந்தாவது இதர இடங்களில் இருந்தாவது வரும் தொகைகளுக்கும் செலவழிக்கப்படும் தொகைகளுக்கும்



வவுச்சரில் யாருடைய கையெழுத்திருந்த போதிலும், பணம் வரவு, செலவு செய்பவர் கையெழுத்து இல்லாத பட்சத்தில் செல்லமாட்டாதென்பதை மிராசுதார்கள் எல்லாருக்கும் விவரமாய் தெரியப்படுத்தி யிருக்கவேண்டும்.

மேற்கண்ட விவரப்படி வரவு செலவுகளில் மீந்த தொகைகளைக்கொண்டு குடும்பத்தில் கடன்களிருந்தால் முதலில் அவற்றை தீர்க்கவேண்டும். பிறகு அவசியமாய் காணப்படும் சீர்திருத்தங்களை (வீட்டு ரிபேர் முதலியன) செய்துகொண்டு மற்றவைகளை, கல்யாணம், வியாபாரம், தர்மம் முதலியவைகளை படிப்படியே செய்யவேண்டும். கடன்களும் இதரச்செலவுகளுமில்லாதிருந்தால், அத்தொகைகளை சீர்திருத்தம், தர்மம், சொந்தச்செலவு முதலியவைகளுக்குச் செலவாகக் கூடியதற்குத்தகுந்தபடி, பங்கு பிரித்து அந்த அந்த இனங்களுக்கு செலவுசெய்து, அதனால் ஏற்படும் லாபங்களை அவைகளின் மூலதனமாக வைத்து அவைகளை விருத்தி செய்தால் எப்போதும் சரியாக நடந்து வரும்.

சீர்திருத்தங்கள்.

முக்கியமாய் இருப்பிடத்தை சுத்தமாகவும் பந்தோபஸ்தாகவும் சௌகரியத்துக்கு வேண்டியபடி ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது. தக்க பிரபுக்களாயுள்ள அநேகர் இங்கிலீஷ்காரர்களை அனுசரித்து பெரிய டவுன்களிலும், கிராமங்களிலும், வீதிகள், பங்களாக்கள் அவைகளுக்கு வேண்டிய சாமான்கள், தோட்டம் முதலியவைகளினால் நல்ல சுகத்தை யடைந்து அனுபவிப்பதால், அதைப்பற்றி இவ்விடம் அதிகமாய் எழு

கவிக்கு, நிலவரியில் அனுபோகமில்லைதார்களும், கிராமவாசிகளுமான சிலர் பழைய விதிகளை அப்படியே வைத்துக்கொண்டு [illegible] கொளாலத்தையும் அபேட்சித்து சில பாகமட்டும் கட்டி வருகிறார்கள். அவைகளை அவசியம் பத்திரமாக பொதுவான வரவினை கட்டிக்கொள்ள வேண்டியதுடன் அடிக்கடி சீர் செய்து வருகிற வருஷம் வேலைகளை பார்க்க வேண்டும்.

கிராம சீர்திருத்தங்களில் முக்கியமாய் செய்து வருபாயத்துக்கள், சாணி சாம்பல் முதலியவைகள் போக, பசிதாள் எருவை பிடித்து மண்ணின் குணத்திற்கு தக்க வேளாண்மையான பயிர்களை விருத்தி செய்தும், சாகாத பலன்தரக்கூடிய தென்னை, மா, பலா, புளி, முருங்கை முதலியமரங்களை பயிர் செய்தும், மூங்கில் பனை போக்கூடிய சவுக்கு முதலிய மரங்களையும், கருப்பு, வாழை, கொடிக்கால் வெற்றிலை தென்னை மரங்களையும் பயிர் செய்வதுதான். அவைகளுக்கு தக்கபடி [illegible] முறையாகவோ சீர் பண்ணி வைத்தால் இவெண்டை, வாழை, கத்தரி, கீரை, முதலியவைகள் சாகுபடியாக கிடைக்கும். [illegible] இக்கிணறுகளிலிருந்து நீர் [illegible] ஜலாதாரங்களில் [illegible] உண்டாக்கிக்கொண்டு அமைத்திருக்க சௌகரியமான ஜலமிறைக்கும் பொருட்டு, ஆயில் இஞ்சின் (Oil Engine) ஸ்டீம் இஞ்சின் (Steam Engine) முதலிய மிஷின்களையும், அவைகளின் [illegible] நிலக்கரிகளையும் [illegible] வேண்டும்.



அவைகளுக்கு தெரிந்தமனுஷர்களும் இடமும் அவசியம்.

சிலநிலங்கள் களர்க்குறைவினால் விளைவு குறைந்து பிரதாகரர்களுக்கு அதிருப்தியை உண்டாக்கும். அவைகளை கேசில்வளித்து சிரமப்பட்டு பண்படுத்தினால் அந்தநிலங்கள் மேன்மேலும் செப்பட்டு நம்பத்தக்கதுவாகும். அதற்காக கவர்ன்மெண்டார் நிலங்களை சீர்திருத்தவும், கிணறு முதலிய ஜலாதாரங்களை உண்டாக்கவும், உழவுமாடுகள் வாங்கவும், இன்னும் அநேகவித விவசாய அபிவிருத்திகளுக்கும் தனித்தனியாக அவரவர்கள் நிலங்களுக்கும் அபிவிருத்திகளுக்கும் தக்கபடி ஒவ்வொன்றுக்கும் ரூ 50 முதல் ரூ 1000 வரையில் கொடுத்து பிறகு, மேற்படி தொகைகளை சொற்ப வட்டியுடன் சௌகரியப்படி 5 வருஷம் முதல் 20 வருஷ வரையில் வருஷத்திற்கு கொஞ்சமாக கொடுக்கும்படி தகுந்த உதவிகளை ஏற்படுத்தி கொடுத்து வருகிறார்கள். சிலர் ஒரு சமயம் தங்கள் சொந்த ஐவேஜியிலிருந்து செலவு செய்வதற்கு எந்த காரணத்தைக்கொண்டாவது சௌகரியப்படாத பட்சத்தில் கவர்ன்மெண்டிலிருந்தாவது மேற்கண்டபடி தொகைகளை வாங்கி நிலங்களை சீர்திருத்தி பண்படுத்தினால் அதிக வரும்படிகளையடையலாமென்பது நிச்சயம்.

சீர்திருத்தம் முதலியவற்றால் முதலில் இரண்டு மூன்று வருஷங்களில் இலாபம் கிடைக்காமல் ஒருசமயம் கஷ்டம் நேரிட்டாலும், "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" ஆதலின் மனது கலைக்காமல் தற்காலத்தை அனுசரித்து வெற்றிதமாகவாற்றி செய்யவேண்டும். ஆதலால் ஆரம்பிக்குமுன் நிதானித்து வரவு செலவுகளை அனுசரித்து தொடங்கவேண்டும். அவ்விதம் ஆரம்பிக்கால். "செய்வன திருந்தச்செய்" என்பது ஒழுங்காய்நடத்தி

பலனடைந்து நாளுக்கு நாள் அதிகப்படுத்தவேண்டுமேயொழிய ஏராளமாய்த் தொகையை செலவு செய்து ஆரம்பித்துவிட்டால் பிறகு அதிக கஷ்டப்படவேண்டியதுடன் நஷ்டமும் ஏற்படும்.

## கடன்வட்டி.

கடன்உள்ள குடும்பங்களில் குடும்பத்தின் வரவு செலவை கிரகணித்து அதிகச்செலவுகளைக் கூடியவரையில் நிறுத்தி வருமானத்திலிருந்து வட்டிகொடுத்து முதலும் கொஞ்சம் கொடுக்கவேண்டும். முடியாவிட்டால் முதலுக்கீடாக இத்தனைவருஷங்கள் அநுபவித்துக்கொண்டு பிறகு விட்டுவிடுகிறதென்று கடன்காரர்களிடம் (பின்னிட்டுக் கோர்ட்டுக்குப் போகாமலிருக்கும்படி) ஒப்பந்தஞ்செய்து கொண்டு சிலபாகத்தை விடுவது நல்லது. அப்படிக்கில்லாவிட்டால் வட்டி கொடுக்கும் பெரிய இம்சையிலிருந்து விலக வேண்டி நிலங்களின் ஒருபாகத்தை ஒத்தியாகவைத்து இதர வரும்படிகளிலிருந்தாவது வருஷவரி மிச்சங்களிலிருந்தாவது கொடுத்து மீட்டுக்கொள்ளவேண்டியது. அப்படிச்செய்யாவிட்டால் முதலும், வட்டியும், இதரச்செலவுகளும் சேர்ந்து பக்கசொத்தினால் ஈடாகாமல் இதரநிலங்களையும் கொண்டுபோய்விடும். அவைகளுக்கு இடங்கொடுக்காமல் நிர்ப்பந்தம் ஏற்படுவதற்குமுந்தி தீர்க்கமுடியாத அதிகக்கடன்களை அவசியமானால் சிலநிலங்களைவிற்றுக்கொடுத்து கடன் கொடுத்தவர்களின் தொந்தரவில்லாமல் செய்துகொள்ளும் விஷயத்தில் தாங்களே ஒவ்வொரு விஷயங்களையும் நேரில் கவனிக்கவேண்டும்.



## சிப்பந்திகள்.

மிராசுதார்கள் எல்லாவிஷயங்களையும் தாங்களே நேரில் பார்ப்பது அசாத்தியமாகையால் அவரவர்கள் எஸ்டேட்டில் வரும்படிக்குத்தக்கபடி "ஆளைத்தேடி ஆஸ்தியைத்தேடு" என்றவிதப்படி சிப்பந்திகளை நியமிப்பதில் எவர்முக்கியமென்று கவனித்து அசாமிகளைகுறைக்கவோ ஜாஸ்திப்படுத்தவோ வேண்டும்.

தகுந்தமனுஷியர்களை வேண்டிய சம்பளம் கொடுத்து நியமிப்பதில் தங்களுக்குச் சௌகரியமும் இஷ்டமானால் இதர வேலைகளுக்கிடமும் சாவகாசமுண்டானபோது நேரில்பார்க்கவும் இடமுண்டாகும்.

சிலர் செலவு அதிகமென்று நினைத்தோ, வேலையின் விஷயம் தெரியாததினாலோ, அசாமிகளைக் கம்மிப்படுத்திச் சில காரியங்களை தாங்கள் நேரில் பார்க்க உத்தேசிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சில சமயங்களில் ஏற்படுகிற வேலைத்தொந்தரவுகளினால் முடியாமல் முக்கியமான காரியங்களை நிறுத்திவிடுவதைக்கொண்டு ஏற்படும் நஷ்டம் எல்லாவற்றிற்கும் மேலானது. தவிர வேலை நிர்ப்பந்தத்தினால் ஒருநாளும்சுகமில்லை.

கணக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள கையெழுத்துடன் மேல்பனுஷான் பார்த்ததற்கு ருஜுவாக அவரை இனிஷியல் செய்வித்து பிறகு தாங்கள் நேரில் பார்க்கவேண்டும். அவைகளில் பிசகிருந்தால் உடனுக்குடன் கண்டித்து குறைபாடுகளைத்திருத்தி தாமதமின்றியில் பைசல் செய்ய வேண்டும்.

தபால்பார்க்கவும், ஜவாப்செய்யவும், கணக்குகள் பார்க்க

வும், செக்செய்யவும், குடிகளின் குறைபாடுகளைக் கேட்கவும், அவரவர்கள் சௌகரியத்திற்குத் தக்கபடி காலத்தைக் குறிப்பிட்டு குறித்த காலத்திலேயே ஒவ்வொருவரும் தவறாமல் அந்தந்தக் காரியங்களை நடத்தத்தயாராக இருக்கவேண்டும்.

கிராமங்களுக்குப் போவது முதலிய வேலைகளைப்பார்ப்பதில் இன்னின்ன இடங்களுக்கு இன்னின்னதினம் போகிறதென்று குறிப்பிட்டு முதல் நாளிலேயே தயாராயிருக்கும்படி கிராமாதிகாரிகளுக்குக் கண்டிப்பாய்த் தெரியப்படுத்திவிட வேண்டும்.

அக்காலத்தில் கிராமங்களுக்குப் போனதற்கடையாளமாக அவ்விடத்தில் ஏற்பட்ட குறைபாடுகளைத் தீர்த்தும், கண்டித்தும், பரிசோதனைசெய்தும், கணக்கில் பிசகுகளிருந்தால் திருத்தியும், ஒழுங்குபடுத்திக் கணக்குகளில் இனிஷியல் செய்ய வேண்டும். எந்தவேலையிருந்தாலும் வாரத்திற்கு ஒருமுறை கிராமங்களுக்குப் போகவேண்டும். நெடுநாளாய் வேலையில் இருந்தவர்களையும், அனுபோகம் தெரிந்தவர்களையும், யோக்கியர்களையும், திடீரென்று வேலையிலிருந்து நீக்குவது சரியல்ல.

எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதென்னவென்றால்; எந்த விஷயம் யாரால் நடத்தவேண்டுமோ அதை அவரையன்றி நடத்துதல் கூடாது. கீழ்ப்பட்டவர்களுக்குப் படிப்படியாய் அவரவர்களுக்குத் தகுந்த மரியாதையை வைக்கவேண்டும். அதை அவரவர்களும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். குறைபாடுகளை நிவிர்த்தி செய்யவேண்டிய விஷயங்களில் அசிரத்தை கூடாது. ஒவ்வொருகாரியங்களையும் தீர்க்க விசாரித்து உண்மையறியாமல் ஒருவர்வார்த்தையைக் கேட்டுக்



கொண்டு கோபத்தினாலோ அவசரத்தினாலோ முடிவு செய்தல் கூடாது. குற்றஞ் செய்தவர்களைத் தகுந்தபடி கண்டிக்க வேண்டும். அசாமியை நீக்கிவிட வேண்டுமென்று தோற்றினால் தாக்ஷிண்ணியமில்லாமல் நீக்கவேண்டும். தாக்ஷிண்ணியப்பட்டு வைத்துக்கொண்டால் வேலைகள் சரிவர நடக்கமாட்டாதென்பது திண்ணம்.

## 2-வது அத்தியாயம்

## சிப்பந்திகள்.

மிராசுதார்கள் ஒவ்வொருவிஷயங்களையும் தானே நேரில் பார்த்து வரவு செலவு செய்யவும், நடவடிக்கைகளை கவனிக்கவும், தன்னுடைய எஸ்டேட்டுக்கு தக்கபடி சிப்பந்திகளை நியமிப்பதினால் தனக்கு இதர வேலைகளிருந்தால் அவைகளுக்கு இடைஞ்சலின்றியிருப்பதுடன், தனக்கு கவலையின்றியும், ஜவாப்தாரியில்லாமல் எல்லாவேலைகளை கவனிக்க காலமும் உண்டாவதுடன் சுகத்திற்கும், குறைவின்றியிருக்கலாம். அவர்களை முக்கியமாய் இரண்டு விதமாக ஏற்படுத்த வேண்டும். குடும்ப விஷயத்தில் ஒவ்வொன்றும் தானே நேரில் கவனிக்கவும், நடத்தவும், காலமும், சௌகரியமும், இருந்தாலும் சில விஷயங்கள் படிப்படியாய் வந்தால் இருக்கப்பட்ட மற்றவர்களுக்கு மதிப்பும், காரியங்கள் ஒழுங்காயும் நடப்பதுடன் கஷ்டங்களுக்கும் இடமில்லாமலிருக்கும். குடும்ப சிப்பந்திகளையும் கிருகசிப்பந்திகளையும் நியமித்து வேலைபார்ப்பதில், அவர் அவர்களுக்கு ஏற்பட்ட வேலைகளில் அவ்வவற்றின் ஜவாப்தாரியாக அவ்வவர்களை கட்டுப்

படித்தி ஒழுங்காய் பார்க்கச்செய்து தாங்களும் அடிக்கடி ஒவ்வொன்றையும் கவனிக்கவேண்டும்.

மேற்படி சிப்பந்திகள் இருவகைப்படுவார்கள்.

குடும்பசிப்பந்திகள்.

1. ஏஜெண்டு:- மிராசுதார்கள் தங்களுடைய குடும்ப வேலைகளுக்கும் கிராமவேலைகளுக்கும் தங்களுடைய சௌகரியத்தையும் எண்ணிட்டுவரும்படியையும் அனுசரித்து தாங்கள் நேரில் போய் நடத்தவேண்டிய காரியங்களை, தங்களைப்போல (அகம்பாவமின்றி) பாவித்து நடத்தத் தகுந்த திறமையும், மதிப்பும், படிப்பும், விவகார ஞானமும், கிராமங்களில் நல்ல அனுபோகமும், குடிகளை ஆதரிக்கும் தன்மையையும், தனக்குட் பட்டவர்களிடம் அன்பும், வேலையில் கண்டிப்பும், விஷயங்களில் முன் ஜாக்கிரதையும், யோக்கியமும், உள்ள ஏஜெண்டுகளை நியமித்து, தகுந்த சம்பளமும் கௌரவமும் கொடுத்து, சமயங்களில் தங்களுக்குச்சமானமான மரியாதையுங் கொடுக்கவேண்டும். கூடியவரையில் நேரில் தெரிந்தவராக இருப்பது நன்மை.

2 சப்ஏஜெண்டு அல்லது மானேஜர்:— இவருக்கும் மேற்படி ஏஜெண்டுக்குள்ள யோக்கியதாம்சங்களிருக்கவேண்டியது அவசியம், ஏனென்றால், ஒரு சமயம் ஏஜெண்டுக்குப்பதிலாக இவர்கள் பார்க்கும்படி நேரிடும்.

3. குமாஸ்தா;— இவர்கள் கணக்குகளில் நல்ல அனுபோகமும், ஞாபகசக்தியும், சுறுசுறுப்பும், கூடியவரையில் விவகார ஞானமும், தஸ்தாவேஜுகள் எழுதும் விதமும், காரியங்களைச்



சாதிக்கவல்ல தைரியமும், யோக்கியமும், நடவடிக்கை ஒழுங்கு உள்ளவராயும், உலகநடவடிக்கை தெரிந்தவராயும் இருக்கவேண்டும். கியாஷியர் தனிமையில் இல்லாதசமயங்களில்ரொக்க இருப்பு முதலியவைகளை இவரிடம் ஒப்புவிக்க வேண்டியிருப்பதால், தகுந்த நாணயமும், வீடு முதலிய ஐவேஜிகளும், ஸ்திரவாசமும் உள்ளவராய் நியமிக்கவேண்டியது. அவசியமானால் வரவு செலவுகளுக்குத் தக்கபடி ஜாமீன்வாங்குவது நல்லது.

4. கியாஷியர்;— நாணயமும், யோக்கியமும், தைரியமும் உள்ளவராயும், கணக்கெழுதத் தெரிந்தவராயும், மேற்கண்டபடி ஐவேஜிமுதலியன உள்ளவராயும் இருக்கவேண்டும்.

5. ரிகார்டுகீப்பர்:— படிப்பும் நல்ல ஞாபகசக்தியும், அனுபோகமும், உள்ளவராயும், இருக்கவேண்டும்.

6. பரிசாரகன்:— இவன் மரியாதையும், யோக்கியமும் சுத்தமுள்ளவனாகவும், வாலிபனாக இருந்தால் வீட்டுவேலையிலேயே இருந்தவனாகவும், சம்சாரசகிதமாயிருப்பவனாகவும், இருக்கவேண்டும். சிலகாலம் வேலையிலிருப்பதும், சிலகாலம் வெளியிலே போவதும், இல்லாதவனும் காபிகிளப் முதலிய இடங்களில் நல்ல சகவாசமின்றிக் கெடுதியடையாதவனுமாய் இருத்தல்வேண்டும். இவன் ஸ்திரமாயிருக்க வேண்டியவனாகையால் காலத்தை அனுசரித்துச் சம்பளம் கொடுக்கவேண்டும்.

7. வேலைக்காரன்:— இவன் திருட்டென்பதே தெரியாதவனாய், நல்லசகவாசமுள்ளவனாய், சுமாராக எழுதப் படிக்கத்தெரிந்தவனாய், குடும்பத்திலிருந்துபழகி வீட்டு வேலைகள் தெரிந்தவனாக இருக்கவேண்டும்.

8. வண்டிக்காரன் கோச்மான் அல்லது குதிரைக்காரன்:— கைராசியுள்ளவனும், மாடு, குதிரை, முதலியவைகளின் குணம் தெரிந்து நடத்துபவனும், பயந்தவனும், மரியாதை தெரிந்தவனும், அதிகக்குடியில்லாதவனுமாக இருக்கவேண்டும்.

பரிச்சாரகன் வேலைக்காரன் அல்லது வேலைக்காரி வண்டிக்காரன் முதலியவர்களை, சௌகரியத்திற்கும் அவசியத்திற்கும், தக்கபடி அதிகப்படுத்த வேண்டியது. மிராசுதார்களுக்கு சுயமாகப் பார்த்துக் கொள்ளச் சக்தியிருந்த போதிலும், காலத்தை அநுசரித்துத் தங்கள் கௌரவத்திற்காக இவர்களை அவசியம் நியமித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

## கிராம சிப்பந்திகள்.

1.— ஹெட் காரியஸ்தர்:— சாகுபடி விஷயம் முழுமையும் சொந்த அநுபவத்தில் நன்றாயறிந்தவராகவும், கைராசியுள்ளவராகவும், பாய் வாய்க்கால, வடிவாய்க்கால், பாய்ச்சல் அனுபோகம், நிலங்களின் நலம் இளப்பம், ஒப்பனைப், பாத்தியம், எல்லை, பக்கப் பாத்தியம், சமுதாய வீதம் முதலியவைகளின் அனுபோகம் நன்றாய் அறிந்தவராகவும், உள்ளூராகவும், தமக்குட்பட்ட யாவரிடத்திலும் வேலை வாங்கும் திறமையும், கொடுப்பதில் நிதானமும், வேலைகளில் கண்டிப்பும் உடையவராயும் எழுதப் படிக்கத் தெரிந்தவராகவும், எஜமானுக்குத் துரோகம் செய்யாதவராகவும், இருக்கவேண்டும்.

2. கணக்கப்பிள்ளை:— கிராமக் கணக்குகளையும், குத்தகை, வாரம் பகுதி (மேல்பாதி குடிபாதி) முதலிய தஸ்தா



வேஜுகளையும், அநுபோகத்துடன் செவ்வையாய் எழுதத் தெரிந்தவராகவும், கூடியவரையில் கோர்ட்டு நடவடிக்கைகள் தெரிந்தவராகவும்; வயதில் கடமையுள்ளவராகவும் இருக்கவேண்டியது. தவிர இவர்கள் சிலசமயம் ஹெட் காரியஸ்தர் வேலையும், பார்க்கவேண்டியிருக்குமாதலால், மேற்கண்ட அநுபோகமும் தெரிந்திருக்கவேண்டும், பணப்பகுதி எழுதுவதில் விசேஷக்கவனிப்பு வேண்டும்.

3. கார்பார்:— சாகுபடி விஷயம் தெரிந்தவனாகவும், ஆட்களை சுகனுமாகவோ, அச்சுறுத்தியோ, அழைத்துவரவும், வேலை வாங்கவும், திறமையுள்ளவனாகவும், வேலை தவக்கப்பட்டால் தானே வேலையில் இறங்கிச்செய்து காட்டவல்லவனாகவும்; அவசியம் காவல்காரனுடன் கூட விருக்கத்துணிந்தவனாகவும், வயதில் சாமர்த்தியமுடையவனாகவும், கொஞ்சமாவது எழுதப்படிக்கத் தெரிந்தவனாகவும் இருக்கவேண்டும்.

4. காவற்காரன்:— குடியானவன், பள்ளன், பறையன், இவர்களில் யாராக விருந்தாலுமிருக்கலாம். எஜமானருக்குச் சொந்தமான மனையில் குடியிருப்பவனாகவும், ஜாமவழக்கம், அனுபோகம், முதலியவைகள் நன்றாய் அறிந்தவனாகவும், குடிகளாயுள்ளவர்களையும், வேலைக்கு வாராதவர்களையும், அழைத்துவர யோக்கியதையும், இராக்காலங்களில், பயமின்றி வெளியில் சஞ்சரித்தலும், யோக்கியமான நடவடிக்கையும் உள்ளவனாக இருக்கவேண்டும், இவனுக்கு கார்பார் இல்லாத இடங்களில கார்பார் வேலையும் சேர்த்துப்பார்க்கும் திறமையிருக்கவேண்டும்.

5. வெட்டியான்:—எஜமானனுக்குச் சொந்தமான மனையில் குடியிருப்பும், காவற்காரனைப்போன்ற சாமார்த்தியமும், உடையவனும், களத்தளவு, குத்தகை அளவு, விலை அளவு, முதலியன தெரிந்தவனுகவும், நடத்தை அந்தஸ்தவனும், தைரியமுள்ளவனுமாக இருக்கவேண்டும்.

6. நீர்ப்பாய்ச்சுக்காரன்:—பாய்வாய்க்கால், வடிவாய்க்கால்களின் பாத்திய அனுபோகந் தெரிந்தவனுகவும், இவைகளிலும் வயல்களிலுமுள்ள மேடுபள்ளங்களை அறியக்கூடியவனுகவும், இராக்காலங்களில் தனிமையாகவும் போகவேண்டியவனுகையால் பயமற்றவனுகவும், சாமார்த்தியமாகவும், தைரியமாகவும், பாய்வாய்க்கால், வடிவாய்க்கால்களை அடைக்கவும், திறக்கவும், திறமையுள்ளவனுகவும் இருக்கவேண்டும்.

7. பண்ணையாட்கள்:—எஜமானனுடைய சொந்த மனைகளில் குடியிருப்பவர்களாகவும், திடசரீரமுள்ளவர்களாகவும், சாகுபடியின் அனுபவமும் சௌகரியங்களும் தெரிந்தவர்களாகவும், அதிகத்திருட்டு இல்லாதவர்களுமாக இருக்கவேண்டும்.

8. மாட்டுக்காரன்:—சிறுபயலாகவும், மாடுகளை ஜாக்கிரதையாய்ப்பார்க்கத் தெரிந்தவனுகவும் இருக்கவேண்டும்.

## 3வது அத்தியாயம்.

## குத்தகைக்கு அடைக்கவேண்டிய நிலங்கள்

மிராசுதார்கள், நிலங்களின் சாகுபடிக்கு வேண்டிய பராமத்து, கிடை, எரு, விரை, தசகூலி, பண்ணையாட்களுக்கு அட்வான்ஸ். களவு, உழவுமாடுகள், அவைகளுக்குத்தீனி முதலானவைகளுக்கு ஏராளமான செலவுசெய்தும், சிரமப்பட்டும் பண்ணைச்சாகுபடி செய்து சுவல்பலாபம் அடைவதைப்பார்க்கிலும், தகுந்தபேர்வழிகளிடம் தங்கள் நிலங்களை குத்தகைக்கு விட்டுவிட்டால் பணச்செலவு, கவலை, சரீரசிரமம், சப்பளை ஆசாமிகள் இவைகள் இல்லையென்று நினைக்கிறார்கள். கிராமங்களை மொத்தமாய்க் குத்தகைவிடுகிறவர்களுக்கும் தங்களிடத்திலிருக்கிற ஆள்மாகாணங்களுக்காகக்கொஞ்சநிலங்களைப் பண்ணையில்வைத்துக்கொண்டு, பாக்கி நிலங்களைக் குத்தகைக்கு விடுகிறவர்களுக்கும், ஒருநாளும் எவ்விதமான சௌகரியமும் கஷ்டமும் இல்லை. ஆனல் சிலநிலங்களை குத்தகைக்கு விட்டாலொழிய சௌகரியமாய்ப் பார்க்கவும் வருபடியையடையவும் சரிப்படாது. அப்பேர்ப்பட்ட நிலங்களை அடியில் காணப்பட்டிருக்கிறது.



ஏகபோககிராமங்களும், ஒப்பனைக் கிராமங்களும், பங்குவழி நிலங்களுமாயிருக்கப்பட்ட கிராமங்களில் சில்லரையாகவும், பங்குவீதப்படி மகசூலைபட்டும் பிரித்துக்கொள்ளக்கூடியதும் உண்டு. தனித்தனியாகச் சில்லரையாயிருக்கப்பட்ட நிலங்களையும், பங்குவீதப்படி அனுபவிக்கவேண்டியவைகளையும், அவசியம் குத்தகைக்குக்கொடுக்கவேண்டும்.

சிலநிலங்களை வருஷத்திற்குக் கொஞ்சமாய் சுவான்தார் குத்தகைதாரர் இவர்களில் யார் செலவிலாகிலும் மராமத்து செய்து சீர்திருத்தி எரு முதலியன போட்டுப் பண்படுத்திப்போட்டு விருத்திசெய்துகொண்டுவரக்கூடிய குத்தகை தாரர்களுக்கு கூடியவரையில் தணிந்த ரேட்டில் நஷ்டமன்னியில் 5. 6. வருஷங்களுக்குக்குறையாமல் குத்தகைக்குக் கொடுக்கவேண்டும்.

சுவான்தார் கவனக்குறைவினாலோ அலக்ஷியத்தினாலோ சில நிலங்கள் நீடித்த தரிசாக இருக்கலாம். அவைகளை க்குத்தகைதாரர்களை வெட்டி சீர்ப்படுத்திப் பண்படுத்துகிறதாக ஒப்புக்கொண்டால் அதற்காக இத்தனை வருஷங்கள் அந்நிலங்களின் வருமானத்தைக் குத்தகைதாரர்கள் அடைகிறதென்று விடலாம். அக்கெடுக்கடந்த பிறகும் அந்நிலங்களை அன்னியர்கள் கேட்கிற குத்தகைக்கு முதலில் சீர்ப்படுத்தியவர்களுக்கே கொடுக்க வேண்டும்.

நேரில் கவனிக்கவும் பண்ணையில் சாகுபடி செய்ய சௌகரியப்படாத நிலங்களை குத்தகைக்கு கொடுக்கலாம். பாய்வாய்க்கால் வடிவாய்க்கால் ஒழுங்காயும் மராமத்து செய்யப்பட்டதுமான நிலங்களைத்தான் குத்தகைக்கு கொடுக்கவேண்டும்.

மேற்கண்ட நிலங்கள் மிகவும் சொற்பம். பெரும்பான்மையான நிலங்கள் இம்மாதிரி இருக்கமாட்டாது. அப்பேர்ப்பட்டவைகளை குத்தகைக்கு விட்டுப்பலன் அடைவதில் இலாபமில்லை என்பது திண்ணம்.

## 4 வது அத்தியாயம்

## பண்ணை சாகுபடி

சில ஜில்லாக்களில் வைகாசி, ஆனி, மாதங்களில் விரைவிட ஆரம்பித்து புரட்டாசி, மார்கழி, தை, மாதங்களில் குறுவை சண்டிக்கார் சம்பா நெற்களை முறையே கண்டு முதல் செய்து, சில இடங்களில் இருபோகமும், சில இடங்களில் ஒரு போகமுமாய் அனுபவிக்கிறார்கள். சில ஜில்லாக்களில் மூன்றாவது போகமும் சாகுபடி செய்கிறார்கள். சில இடங்களில்



ஏரி முதலியவைகளின் சௌகரியத்துக் கேற்றபடி என்றாலும் சிரமப்பட்டுப் பலன் அடைகிறார்கள். அவைகளில் சிலஇடங்களில் முதல் போகம் ராகி முதலிய புன்செய்ப் பயிரும் இரண்டாவது போகம் நெற்பயிரும், கரும்பு, வாழை, முதலிய வெவ்வேறு பயிர்களையும் காலத்திற்கும், தேசத்திற்கும் நிலத்திற்கும் ஜலத்திற்கும் சௌகரியத்திற்கும் தக்கபடி சாகுபடி செய்கிறார்கள். அவைகளைப் பற்றி அநேக புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்களாகையால் இங்கே சொல்லப்படவில்லை.

ஆனால் முக்கியமாய் கவனிக்க வேண்டியவைகள் என்னவென்றால்.

1— மூன்று ஏகராவுக்கு மேற்படாமல் தாக்குவாரியாய் வரப்புகளைக்கட்டி ஜலம் பாய்ச்சவும் ஒரே பயிர் செய்யவும் உழவு முதலிய வேலைகளுக்குச் சௌகரியமாயிருக்கும்படி செய்யவேண்டும்.

2— நன்செய்யாயிருந்தாலும் புன்செய்யாயிருந்தாலும் ஒரே தாக்கில் ஒரு பக்கம் மேடாகவும் ஒரு பக்கம் பள்ளமாகவும் இருந்தால் அதில் பாயப்பட்ட ஜலம் பள்ளத்தில் அதிகமாகவும் மேட்டில் யில்லாமலும் இருக்கும். அவைகளை முதலில் சமமாகத் திருத்த வேண்டும்.

3— பாய்வாய்க்கால் வடிவாய்க்கால்களை வருஷா வருஷம் வெட்டிச் சுத்தப்படுத்தி ஜலம் வந்தவுடன் தாராளமாய் பாயவும், வடியவும்; சௌகரியப்படுத்தவேண்டும்.

4— செய்கால் இல்லாமல் கிடக்கும் நன்செய், புன்செய், தரிசுகளையும், சுல்பசிலவில் நன்செய் செய்யக் கூடியவைகளையும்

நன்செய்க்கோ புன்செய்க்கோ சேர்ந்தாறாக இருப்பவைகளையும் சீர்திருத்த வேண்டியது. சிலகிராமங்களில் புன்செய் வருமானம் அதிகமாயிருப்பதால் நன்செய்யைப்புன்செய் செய்துவருகிறார்கள்

5— வரி மராமத்துக்களையும் உடைமடைகட்டுதலையும் வருஷா வருஷம் முதலிற் செய்து பிறகு இதர வேலைகளைச் செய்ய வேண்டும்.

இந்த ஐந்து பாராக்களும் குத்தகை கவாரம் பண்ணை முதலிய எல்லா நிலங்களுக்கும் பொது.

நிலங்களுக்குத் தகுந்தபடி எரு, தழை, கிடை, சேகரிப்பதில் பண்ணையில் சேரும் எருவும், சொந்த மனைக்கட்டுகளிலுள்ள எருவும், கிராமங்களில், அக்கம்பக்கம் கிடைக்கக்கூடிய எருவும், சமீபத்தில் முனிசிபாலிட்டி யூனியன்களிருந்தால் அவைகளில் கிடைக்கக்கூடிய எருவும், கொண்டுவந்து முதலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவசியமானால் நாற்றங்கால்களுக்கு இங்கிலீஷ் எரு, புண்ணாக்கு தினுசுகள். வாங்கிப் போடலாம். கிடை எவ்வளவு போட்டாலும் நல்லது. கிடைப்பதற்கும் சௌகரியத்திற்கும் தக்கபடி செய்துகொள்ளவேண்டும். எப்படியிருந்தாலும் எரு அல்லது கிடை இரண்டிலொன்று அவசியம் வேண்டும். பிறகு கிராமவழக்கத்தை அனுசரிக்கவேண்டும் அக்கம்பக்கங்களுக்குக் குறையாமலும், காலப்பிற்பாடாகாமலும், அலக்ஷியமில்லாமலும் செலவைக்கவனிக்காமலும் சாகுபடி செய்யவேண்டும்.

அறுவடைக்காலங்களில் திட்டத்திற்குமேல் கூலிகள் கொடுத்து மகசூல் தயாரானவுடன் செலவைக்கவனிக்காமல் அறுவடை



செய்துவிடுகிறார்கள். இதுவிஷயத்தை கிராமங்களிலுள்ள மேற்காரியஸ்தர் முதலானவர்கள் நிரம்பவும் கவனித்து அதிகச் செலவாகாமல் அறுவடைசெய்யவேண்டும். பிறகு அடுத்த பசலிக்கு வேண்டிய விரை தகாவி முதலியவைகளை 100 க்கு 25 அதிகமாகவே சேகரம் செய்துவைக்கவேண்டும். ஏனென்றால் வெள்ளச்சேதம் வறட்சேதத்தினால் விரைநஷ்டமும், பஞ்சத்தினால் கூலி அதிகமும், ஒருசமயம் இருவிதசேதத்தினால் விலை, இரட்டித்து, வேலைதவக்கம் உண்டாகும். அச்சமயங்களில் பிறரைக்கேட்காமலும், தவக்கமில்லாமலும், வேலைநடத்தச்சௌகரியமாக இருக்கும்.

சில இடங்களில் புன்செய்களே மிகுதியாக இருப்பதால், பாய்ச்சலுக்கேதுவில்லாமல் மழையையே எதிர்பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அவ்விடங்களில், கிணறுகள், துறவுகள், மேட்டு அவைகளிலிருந்து, சகடையேற்றம், கபிலையேற்றம், பம்பு, இஞ்சின், முதலியவைகளினால் ஜலமிறைத்து, ஜலத்தட்டில்லாமல் செய்துகொண்டு, அந்நிலங்களுக்கேற்ற பயிர் செய்யவேண்டும்.

கிணறு துறவுகளில் போதுமான ஜலம் ஊறாவிட்டால், முதல் மழையில் உழவும், மறுமழையில் விதைப்பும், சௌகரியப்பட்டால் களையும், சௌகரியப்படாவிட்டால் அடுத்தமழையில் அவசியம் களைவெட்டியும், பயிர்செய்து அறுவடை செய்யவேண்டும். இந்நிலங்களுக்கு ஆகாயம் கறுத்தவுடனேயே, ஆட்கள், மாடுகள், உழுகருவிகள் சகிதம் உழத்தயாராயிருக்க வேண்டும் புழுதி சரியானபடி இருந்தால் அதற்கே பாதி வெள்ளாண்மை கிடைக்கும் என்பது நிச்சயமானபடியால், நல்ல புழுதியாகும்படி

முதாபண்படுத்திமறை விழுந்தவுடன் விதைப்புக்குத் தயாராக யிருக்கவேண்டும்.

உழவுமாடுகளில் வயதான மாடுகளையும், வேலைக்குதவாத மாடுகளையும், வருஷாவருஷம் கழித்துப்புதிதாய் மாடுகளை முன்னிட்டே வேண்டிய அளவு வாங்கிக்கொள்ளவேண்டும்.

தோப்புப்பலன்களை விருத்தி செய்தலால், சாசுவதமாய்ப்பலனும், அனுபவிப்பதில் சுகமும், வருமானமிகுதியும், இன்னும் அநேக சௌகரியங்களும் கிடைக்கும். ஆனால், முதலில் பணச்செலவையும், பலன்கிடைக்கத் தாமதிக்கும் என்பதையும், கவனிக்கக் கூடாது.

## 5 அத்தியாயம்

## கட்டிடங்கள்.

பெரிய குடும்பங்களில் கட்டிடங்களும், சௌகரியங்களும், அவசியமென்று யோசனைசெய்து சொல்லப்பட்டிருந்தபோதிலும் வீட்டில் சிப்பந்திகள் ஆபீஸ், தன்னுடைய ஆபீஸ், வரப்பட்டவர்களுடன் விஷயங்கள் பேசுமிடம் முதலியவைகளும், படுக்கை சாயல் முதலியவைகளுக்கும், அவசியமானால் பந்துக்களாவது, தகுந்த சமானமான பெரிய மனுஷியானாவது, தங்கும்படி நேரிட்டால் அவர்களுக்கு தனி கட்டிடமோ, ஒருபாகமோ, தனிமையாயும், இருப்பதுடன், மாடுகள் கட்டவும், வண்டிகள் வைக்கவும், அவசியம் வேண்டும். அப்படிக்கன்னியிலிருப்பதால், ஒருவர்க்கொருவர் சந்தர்ப்பங்கள் தெரியாமல்வரவும், பெண்டுகள் நடமாடவும், குழந்தைகள் தொந்திரவு செய்யவும், ஏற்படுவதுடன் காரியங்கள் தவறிப்போவதற்கு ஏதுவாகிறது.





அப்படிக்கன்னியில் அவர் அவர்களுக்கு தனித்தனியான இடங்களிருந்தால் குறிப்பிட்ட காலத்தில் வரவும், அவரவர்கள் வேலையை தவக்கப்படாமல் செய்யவும், ஒருவருக்கொருவர் சம்பந்தமன்னியில் அந்தந்த அலுவல்களை கவனிக்கவும் சௌகரியமாக இருக்கும்.

### குடும்பக்கட்டடங்கள்.

1. மிராசுதாரர்கள் ஆபீஸ்.

2. ஏஜண்டு குமாஸ்தா முதலியவர்களின் ஆபீஸ். இவைகள் தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ இருக்கலாம்.

3. பிகார்டு ரூம், கியாஸ் ரூம், இவைகள் தனித்தனியாகவோ ஒன்றாகவோ இருக்கவேண்டும்.

4. கிராமக்குடிகள் ஒரிடத்தில் தங்கிப்பேசக்கூடிய இடம்.

5. தங்களுக்குச் சமானமானவர்கள்வந்தால் அவர்கள் இருக்கவும் பேசவும், தங்கவும், சௌகரியமான இடம்.

6. மாடு, குதிரைகள், வண்டிகள் நிற்கவும், அவசியமானால் குதிரைக்காரன் குடியிருக்கவும் வேண்டிய இடங்கள்.

இவைகளைத்தவிர சௌகரியத்திற்கும், கௌரவத்திற்கும், இஷ்டங்களுக்கும்; சுகத்திற்கும், தகுந்தபடி பங்களா, தோட்டம், முதலியவைகளை இஷ்டம்போல் செய்து கொள்ளலாம். மேற்கண்ட இடங்களுக்குத்தகுந்த நாற்காலி முதலிய சாமான்களும் (Furniture) விளக்குகளும் அடிக்கடி மாற்றாமல் ஸ்திரமாய்த்தயார் செய்துகொள்ளவேண்டும்.

## கிருமக்கட்டடங்கள்.

1. மிராசுதார்களுக்குத்தனி ஜாகை அல்லது பங்களா
2. ஹெட்காரியஸ்தர் முதலானவர்களுக்குக்கட்டடங்கள்.
3. உழவுமாடுகளுக்குத் தகுந்தபடி மாட்டுக்கொட்டில் (தொட்டி வகையறா உள்பட.)
4. சேர்கட்டுமிடம் (களஞ்சியம்.)
5. தேவாலயம், கிராம எல்லைக்குள் எவ்விடத்திலாவது எந்த தெய்வமாவது இருக்கப்பட்ட கோவில்
6. ஒரு சமயம் சர்க்கார் அதிகாரிகள் வந்தால் கூடியவரையில் சௌகரியமாக இருக்கவும், கச்சேரி செய்யவும் தகுதியான ஆபீஸ்.
7. வைக்கோற் போர்க் கொல்லை.

மேற்கண்ட இடங்களுக்கு வேண்டிய சாமான்களும் விளக்குகளும் தயார் செய்து வைத்துக்கொள்வதுடன், கிராமாந்தரமானபடியால் வேண்டிய அன்றாடகச்செலவு சாமான்களும் எண்ணை முதலானவைகளும், முன்னமே தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் சௌகரியத்திற்கும், அவசியத்திற்கும் தக்கபடி செய்துக்கொள்ளவேண்டியது.

## கிருமத்தில் அவசியமிருக்கவேண்டிய சாமான்கள்

கலப்பைகள்; அதற்குரிய சாமான்கள், மண்வெட்டிகள்; இறைமரம்; இறைகூடை; பறம்புப் பலகை; பொன்னிப் பலகை; ஏற்றுச்சால்; மரக்கால்; குறிமொந்தை; கோடாலி; கடப்பாறை; அரிவாள்தினுசுகள்; கூடைகள்; (சீனிக்கூடைகளுள்பட)



லாந்தர்; துணிக்குடை; தாழங்குடைகள்; தவிர ஆபீஸில் மேஜை நாற்காலிகள்; பெஞ்சுகள்; கணக்கெழுதச் சின்ன மேஜைகள்; முதலியன.

இவைகள்கிருமகாரியஸ்தர்கள் விசாரணையின்பேரில் கார்பாரியிடத்தில் இருக்கவேண்டியது. பழுதுபட்டவைகளை உடனுக்குடன் ரிப்பேர் செய்து உபயோகத்துக்குத்தயாராக வைத்துக்கொள்ளவேண்டும்.

## இரண்டாவது பிரிவு

### 1-வது அத்தியாயம்

### குடும்பசிப்பந்திகளின் வேலைகள்.

1— ஏஜெண்டு :- இவரைப்பற்றிமுதற்பிரிவு 10வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது இவர் சுவான்தாருக்கு அடுத்தபவர் உள்ளவர் மற்றும்இவர் குடும்பத்திலும் கிராமங்களிலும் நடக்கும் எல்லாக்காரியங்களையும் சரிவர நடத்தபாத்தியப்பட்டவராகையால் அந்தந்த வேலைகளை அவரவர்களுக்குத்தக்கப்படி நியமித்து அந்தப்படி நடந்துவருகிறதா வென்று அடிக்கடி கவனித்து பார்ப்பவர் கள்சுவான்தாராகவேதன்னை(செருக்கன்னியில்)நினைக்கும்படி தன் சொந்தசொத்துக்களை எவ்வளவுகருத்தோடும், ஆசையோடும் காப்பாற்றுகிறாரோ அதைவிடப்பதின்மடங்காக எஜமானருடைய சொத்தையும் காப்பாற்றவேண்டும்.

ஏஜெண்டானவர் குடும்பசம்பந்தமாகவாவது கிராமசம்பந்தமாகவாவது கொள்முதல் விற்றுமுதல் கோட்டு விவகாரங்கள், லேவாதேவிகள். இதரத்தொழில்களிலும்இட்டத்திற்குமேல்ஏற்படும்

செலவுகள் மற்றும் கட்டிட ஏற்பாடுகள் முதலிய ஒவ்வொன்றுக்கும் தானும் சுவான்தாரும் அவசியமானால் மற்றும் சம்பந்தப்பட்டவர்களும் கலந்து அவ்வற்றிற்குரிய தஸ்தாவேஜு முதலியவைகளையும் காலத்தையும் சௌகரியத்தையும் அனுசரித்து நடத்த வேண்டும். திட்டத்திற்குமேல் ஏற்படும் செலவு முதலிய விஷயங்களுக்குச் சுவான்தாருடைய உத்தரவைக் கண்டிப்பாய்ப்பெற்றுக் கொள்ளவேண்டும். எந்தவிஷயங்களையும் ஆரம்பிக்கவோ செய்யவோ சுவான்தாருக்குச் சுவாதீனமிருந்தபோதிலும் எஜமானுடையன்றி அவர்கள் செய்வாரேயானால் சில சமயங்களில் நஷ்டமும் கெட்டபேரும் உண்டாவதுடன் சிலகாரியங்கள் தடைப்படவும் கூடும்.

குடும்பத்தில் நடந்துவரும் தர்மங்களை குறைவின்றிச் சரிவர நடத்திவரவேண்டியதுடன் கூடியவரையில் விர்த்தி செய்து ஸ்திரமாய் நடக்கும்படி செய்தால் எல்லாருக்கும் கீர்த்தியும் இகபரசாதகமும் உண்டு.

இவர்பின்னால் விவரித்திருக்கிறபடி குடும்பவரவுசெலவுகணக்குகள் ரொக்க இருப்பு, காரஸ்பாண்டென்ஸ் முதலியவைகளுக்குத்தனித்தனியே டயரிகளை ஏற்படுத்தி ஒழுங்காய் நடத்திவரவேண்டியதும் தவிர (சர்க்யூட் போனநாள் போக) ஒவ்வொருநாளும் ஒவ்வொன்றையும்தான் நேரில் கவனித்து செக்செய்து ருஜுவாக இனிஷியல் செய்து, கையிருப்புத் தொகையைப்பரிசோதனை செய்து அன்றுடகம் வேலைபாக்கியில்லாமல் நடத்திவரவேண்டும்.



கிராமங்களுக்குச் சர்க்யூட் போகும் காலங்களிலும், இதர வேலைகளைக் கவனிக்கும் காலங்களிலும், ஸ்தலத்திற்குப் போனதற்கும், கணக்குகளைப் பார்த்ததற்கும், அத்தாக்ஷியாக கணக்குகளில் இவர் இனிஷியல் செய்ய வேண்டியது. ஒரு சமயம் கிராமங்களுக்குப் போய் ஸ்திரமாக இருக்க நேர்ந்தால் அங்கு வரக்கூடிய தபால்களையும் தாம் கவனிக்க வேண்டிய கணக்குகளையும் வரவழைத்துத் தவக்கமின்றிப் பைசல் செய்யவேண்டும்.

குடும்பத்திலாவது, கிராமங்களிலாவது, ஏற்படும் எல்லாக் குறைகளையும், தகரார்களையும் நேரில் கவனித்து நியாயத்தை அனுசரித்து நடக்கவேண்டும்.

குத்தகை அடைப்பதிலும், பண்ணைச்சாகுபடி செய்வதிலும், வழக்கத்தையும், சௌகரியத்தையும், கவனித்து; ஒருவருக்கும் நஷ்டமில்லாமல் செய்வதில் சம்பந்தப்பட்டவர்களையும் யோசித்து அவர்களையும் கூடவைத்துக்கொண்டு செய்யவேண்டும்.

வேலைக்காரர்களை அபராதம்போடவும், நீக்கிவைக்கவும் இஷ்டமானால் உத்தரவின்பேரில் பர்தர்ப்பு செய்யவும் அதிகாரம் இவருக்கு இருக்கவேண்டும்.

சிப்பந்திகளுக்குத் தவக்கப்படுத்தாமல் அந்தந்த மாதச்சம்பளங்களை அடுத்த அடுத்தமாதம் 5உக்குள் பட்டுவாடா செய்யவேண்டும்.

எஜமானருக்குத் தகுதியான மரியாதையுள்ள இடங்களுக்கும், அவசியமாகத்தோன்றும் விஷயங்களுக்கும், எழுதும தபால்களுக்கு உத்தரவில்லாமல் கையெழுத்து செய்யக்கூடாது.

மற்றப்படி எல்லாத் தபால்களையும் உடைக்கவும், தவக்கப்படுத்தாமல் புத்தகப்போல் பைசல் செய்யவும், இவர் நியமிக்கப்பட்டவர்.

மேற்கண்ட வேலைகளுக்குச் சௌகரியத்தையும் வேலையையும் அனுசரித்துத் தனித்தனி காலங்குறித்து அந்தக்காலத்தில் எந்தவேலை சம்பவித்தாலும், குறித்த வேலையை முதலில் பைசல் செய்யவேண்டும்.

இவர் செய்யும் வேலைகளினால் சர்க்காராருக்கு எவ்விதத் தொந்திரவும், நஷ்டமும், இல்லாமலிருக்க வேண்டியதுடன், எல்லாவற்றிற்கும் இவர் ஜவாப்தாரியாகவும் இருக்கவேண்டும்.

2. சப்ஏஜெண்டு அல்லது மானேஜர்:— இவர் ஏஜெண்டுக்கு அடுத்த அதிகாரி. எப்போதும் கூடியமட்டும் ஆபீஸில் இருக்க வேண்டியவர். ஏஜெண்டில்லாத காலங்களில் அந்தஸ்தானத்தை வகிக்கவேண்டியவர். ஆபீஸ் விஷயங்கள் முழுமையும் பார்க்கப் பாத்தியப்பட்டவர். ஏஜெண்டு செய்யவேண்டிய வேலைகளுக்கும், இதர வேலைகளுக்கும், விசாரணைப்பட்டிருப்பதால் அவைகளைப் பற்றி இங்கே எழுதவில்லை. ஆனால் சிப்பந்திகள் குறைவாக இருந்தால் தனிமையில் பொறுப்பாக ஒருவேலை கொடுக்க வேண்டும்.

3. குமாஸ்தா:— குடும்ப வரவுசெலவுக் கணக்குகளை இவர் எழுதி வரவேண்டியது. தினந்தோறும் வரவுசெலவு முடித்து, அன்றைய தினமோ, மறுநாட்காலையிலோ மேலான அதிகாரியின் கையெழுத்து வாங்க வேண்டியது. அப்படி சரிப்படாத காலங்களில் உத்தரவுப்படி நடக்கவேண்டும். வரவுசெலவுகளுக்கு வவுச்சர்கள் வாங்கி நம்பர் கொடுத்து ரிகார்டு செய்யவேண்டியது. வவுச்சர்களில்லாமலிருந்தால் அதற்குக் காரணம் இருக்கவேண்டும். குறிப்



பில் கண்ட அயிட்டங்களை, அன்றாடமாவது வாரம் ஒருமுறையாவது, லேஜர் அல்லது வருக்கில் பதியவேண்டும். மாதம் முடிந்தவுடன் மறுமாதம் 5உக்குள்ளும், வருஷம் ஆனவுடன், மறுமாதம் 30உக்குள்ளும் மாதப்பட்டோலை (Abstract) வருஷப் பட்டோலை முடித்து, ஜவாப்தாரி சம்பந்தப்பட்டவர்களிடம் முதலில் இவர் அனுப்பி அவர் கையெழுத்துப்பெற்று எஜமானருக்கு அனுப்பவேண்டியது.

கிராமங்களிலிருந்தாவது இதர இடங்களிலிருந்தாவது வரும் கணக்குகளை அப்போதைக்கப்போது ஒத்துப்பார்த்து பிசகுகளாவது, தவறுதல்களாவதிருந்தால் அடையாளம் செய்து ஷராஎழுதித் தவக்கப்படுத்தாமல் மேலாவுக்கு அனுப்பி உத்திரவுப்படி நடக்க வேண்டியது.

வரவேண்டியவைகளுக்கும், கொடுக்க வேண்டியவைகளுக்கும், மாதவாரி ஜாப்தா தயார்செய்து; வரவேண்டியவைகளை அப்போதைக்கப்போது வசூலித்து, கொடுக்க வேண்டியவைகளைக் கூடியவரையில் காலமாயும் சீக்கிரமாயும் கொடுக்க முயற்சியெடுத்துக்கொள்ளவேண்டும்.

மேலாவிலிருந்துவந்த உடைத்ததபால்களையும், தான் உடைக்க அதிகாரம் பெற்ற தபால்களையும், உடனுக்குடன் கவனித்து, புத்தகம்போல் அசல் எழுதக்கூடியவைகளை எழுதியும் டிராப்டு செய்யவேண்டியவைகளுக்கு ஆபீசுகாபி எடுத்தும், தனி அபிப்பிராயம் எழுதவேண்டியவைகளை எழுதியும், மற்றவைகளில் சம்பந்தப்பட்ட பேப்பர்களை வேண்டுமானால் சேர்த்தும், தவக்கப்படுத்தாமல் அனுப்பவேண்டியது. மறுபடி திருப்பிவந்தவுடன் தபால் தவக்கப்படாமல் அவசியத்திற்குத் தக்கபடி அனுப்பவேண்டியது.

எல்லாத் தாவல்களையும் (கணக்குகள் உள்பட) வந்தவுடன் வரவு புஸ்தகத்திலும், அனுப்பும்போது அனுப்பு புஸ்தகத்திலும் உடனுக்குடன் பதிந்து, வருஷவாரித்தொடர்ந்த நம்பர் கொடுக்கவேண்டியது.

கியாஷ்கீப்பர் இல்லாத இடங்களில் ரொக்கம் வைத்துக் கொள்ள நேரிட்டால் கேட்டகாலத்தில் கையிருப்பு ரொக்கம் ஆஜர் காட்டவேண்டியது.

தனிமையில் ரிகார்டுகீப்பர் இல்லாவிட்டால் என்டேட்டு சம்பந்தமான எல்லா ரிகார்டுகளும் இவரிடம் இருக்கவேண்டும். நடப்பு கணக்குகள் தவிர மற்றப்பழைய கணக்குகளையும் (கிராம கணக்குகள் உள்பட) கிராமசம்பந்தமான சாசனம் மூலாதாரம் முதலிய தஸ்தாவேஜுகளையும், லேவாதேவிப்பத்திரங்களையும், கோர்ட்டு நம்பர்க்கட்டுகளையும், எந்தசமயங்களிலும் சுலபமாய் எடுக்கும்படியாய்த் தனித்தனியே பேரிஸ்து போட்டு, நம்பர் கொடுத்து, வெளியில் கொடுக்கும் தஸ்தாவேஜுகளுக்கு வவுச்சர் பெற்று, நம்பர்க்கட்டில் சேர்த்துவைக்கவேண்டும். தஸ்தாவேஜுகள் காலாவதியாகி அதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு இவரே ஜவாப்தாரியானபடியால் அதிக ஜாக்கிரதையாய் காலாவதியால் பீடிக்கப்படாமல் முன்னாடியே வேண்டிய நடவடிக்கைகளை நடத்தவேண்டும். அல்லது முன்னாடியே மேலாவுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டும்.

மேற்கண்டபடி ஒழுங்காய் நடந்தால், வரவுசெலவுகள் விட்டுப்போகாமலும், வவுச்சர்கள் பிசகாமலும், தபால்கள் தவறாமலும், தஸ்தாவேஜுகள் கெடாமலும், வீட்டில் புகார் இல்லாமலும், சரிவர நிறைவேறும். ஆகையால் வேலைகளுக்குத்தகுந்த



ஆசாமிகளை நியமித்து, சிரமத்திற்குத்தகுந்த சம்பளங்கள் கொடுக்கவேண்டும்.

பெரியகுடும்பங்களிலுள்ள வீட்டுவேலைக்காரன் முதலியவர்கள் இவருடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியது. வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் முதலியவைகளும், மொத்தமாய் வாங்கவேண்டிய சாமான்களும், தனிமையில் வேலைக்காரன் இல்லாதபக்ஷத்தில் தானே நேரில்பார்த்து வாங்கவேண்டியது. வீட்டிலுள்ள வண்டி, மாடு, குதிரை, முதலியவைகளை அடிக்கடி கவனித்துத் தீனிகளைச் சோதித்து எப்போதும் நல்ல ஸ்திதியில் இருக்கும்படி செய்யவேண்டும்.

4 கியாஷ்கீப்பர்;—ரொக்க வரவு செலவுமட்டும் இவரிடம் இருப்பதினால், குறிப்புப்படி இருப்புத்தொகையும், வவுச்சர்களின்படி வரவு செலவும், பிசகில்லாமல் சரிவரக்கவனிக்கவேண்டும். பிசகாக ஏற்படும் பட்டுவாடாக்களுக்கும், இருப்புத்தொகைகம்மிப்படுவதற்கும் இவரே ஜவாப்தாரி. அன்றாடகம் சாயந்திரம் குறிப்பிட்டகாலத்திற்குள் கணக்கு முடித்து மேலாவுக்கு அனுப்பவேண்டியது. இருப்புத்தொகை வைக்குமிடத்தில் இவர் சீலுடன் மற்றொருவர் சீலும் அவசியம் இருக்கவேண்டும். சீல் உடைக்கும் காலத்திலாவது, சந்தேகப்பட்ட காலத்திலாவது கியாஷ்கீப்பர் மேலான அதிகாரியின் உத்திரவின் பேரில் செய்யவேண்டும். சில சமயங்களில் கியாஷ்கீப்பர் இடம் இருப்புத்தொகைகள் பூராவும் கொடுத்து அவைகளின் ஜவாப்தாரித்தனத்தை நம்பமுடியாமலோ இதர அசௌகரியங்களினாலோ ஒப்புவிக்க முடியாமலிருக்கலாம். அப்போர்ப்பட்ட அயிட்டங்களுக்கு ஒரு மாதத்திய வரவு செலவுக்கு வேண்டிய இருப்பை தொடுத்து மற்றவைகளை தானே வைத்துக் கொள்ளலாம்.

5— ரிகார்டு கீப்பர்:— இவர் செய்யவேண்டிய அலுவல்களை குமாஸ்தாவின் அலுவல்களில் விவரமாய் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அந்தப்படி நடக்க வேண்டும்.

6— பரிசாரகன்:— காலையில் சிற்றுண்டியும் காபியும், 11 மணிக்குள் சாப்பாடும், 3 மணிக்கு டிபனும், இராத்திரி 8 மணிக்குள் சாப்பாடும் தயார் செய்து வைக்க வேண்டியது. முக்கியமான சமயங்களில் அந்த சாமான் இல்லை இந்த சாமான் இல்லை யென்று சொல்லாமல் இல்லாத சாமான்களை முன்னாடியே தெரிவித்து வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். புதிதாய் வருகிறவர்களை அசிரத்தையாக உபசரித்தால் எஜமானருக்கு கெட்ட பெயரும், வந்தவர்களுக்கு எஜமானரிடம் மனஸ்தாபமும் எஜமானருக்குத் தன்னிடம் கோபமும், உண்டாகி அதனால் பல தீமைகள் உண்டாகும் என்பதை யறிந்து அதற்கு தகுந்தபடி யாவரையும் தன்னுடைய உபசாரத்தால் திருப்தி செய்யவேண்டியது. பெண்டுகளிடம் நடமாடக்கூடியவனாகையால் அதிக ஜாக்கிரதையாயும் மரியாதையாயும் நடந்து கொள்ள வேண்டியதுடன் நாகரிகமாய் வஸ்திரந்தரித்துக் கொண்டு தன்னிடம் எவ்வித புகாரும் உண்டாகாமல் எஜமானியம்மாளுக்குப் படிந்து உத்திரவுப்படி நடந்து கொள்ளவேண்டியது.

7— விட்டு வேலைக்காரன்:— அல்லது சிப்பாய்:— காலை 6 மணிக்கு வந்தவுடன் ஆபீசு முதலிய இடங்களைச் சுத்தம் செய்து, மேஜை நாற்காலி முதலியவைகளைத் திருத்தமாக வைத்து ஸ்டூல், இங்க்பாட்டில் முதலியவைகளையும் சரிவர வைத்து, பிறகு வீட்டுக்கு வேண்டிய கறிகாய் சில்லரை சாமான்களையும் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்து, சிம்னி லாந்தர் விளக்கு முதலியவைகளைச் சுத்தி செய்து எண்ணெய் விட்டு வைக்க வேண்டியது





தபால் சமயத்தில் தபால்களை வாங்கிவரவும் கொண்டுபோகவும் வேண்டும், சில சமயங்களில் (நம்பிக்கையின் பேரில்) சில்லரை வசூல் செய்யப் போகவும், சாவகாசமிருந்தால் அவசரமான சமயங்களில் ஆபீசுக் கவர் முதலியவைகள் செய்யவும் சில்லரை வேலைகாரியங்கள் செய்யவும் உபயோகமுள்ளவனாயிருக்கவேண்டும்.

வெளியில் போகவேண்டியவர்களுடன் அவசியம் கூடப்போக நேர்ந்தால் போகவேண்டும். எஜமானருக்கு டிரஸ் செய்துவிடவும். இஷ்டப்பட்டால் கைகால்கள் பிடிக்கவும்வேண்டும், சாயங்காலம் ஜலம் தெளிக்க வேண்டிய விடங்களில் வெய்யில்காலங்களில் ஜலந்தெளிக்கவேண்டும். படுக்கைகள் போடவேண்டிய இடங்களில் படுக்கை முதலியவைகளைச் சுத்தப்படுத்திப் போடவேண்டும், மோடார்சைகிள், பைசைகிள் முதலியவைகள் இருந்தால் அவை சுத்தமாய்த் துடைத்துத் தயார் செய்து வைக்கவேண்டும்.

8— வண்டிக்காரன்:— அதிகாலையில் எழுந்தவுடன் மாடுகளை நன்றாய்த் தேய்த்து, வண்டியைக் கழுவி, சுத்தமாய்த் துடைத்து, சவாரியின் சமயந்தெரிந்துகொண்டு வெளியில் போகவேண்டும், சவாரி போய் வந்தவுடன் மாடுகளைக் குளிப்பாட்டிக் கட்டித் தீனி முதலியவைகள் போட்டு, சாயங்காலத்தில் மாடுகளுக்குத் திட்டப்படி பருத்திக்கொட்டை முதலிய ஆகாரங்களை வைத்து தண்ணீர் காட்டிக் கட்டி வைக்கோல் போடவேண்டும், கால்குளம்பு தேயாமல் லாடங்கட்டவேண்டும். வண்டிக்கு மசியோ, கொழுப்போ போட்டு சொற்ப பழுது ஏற்படின் முன் ரிப்பேர் செய்து, பந்தோபஸ்தாய் பார்த்துவர வேண்டும். சில சமயம் மோடார்சைகிள் முதலியவைகளைத் துடைப்பது இவனுடைய வேலை.

தனிமையில் மாட்டுக்காரனாவது தோட்டக்காரனாவது இல்லாமல் கறவைமாடுகள் இருந்தால் அவைகளைக் குளிப்பாட்டவும் மேய்க்கவும், தீனிவைக்கவும், வேண்டும். கொஞ்சமாய்ப் பூச்செடி, பயிர்க்குழி முதலியவைகளிருந்தால், அவைகளுக்குக் களை கொத்தித் தண்ணீர்விட்டு வேண்டிய செய்நேர்த்திகள் விருப்பத்துடன் செய்யவேண்டும்.

கோச் முதலிய குதிரைவண்டிகள் இருந்தால் அவைகளுக்குக் குதிரைக்காரனுடன் அவசியமிருந்தால் தனிக்கோச்மானை நியமிக்கவேண்டும்.

குதிரைக்காரன் குதிரையைத் தேய்க்கவும், தீனிவைக்கவும் பசாலை முதலிய மருந்துகள் மேய்க்கவும், அவசியமுண்டானால் அதிக மயிர்களைக் கத்திரிக்கவும், குதிரை இளைக்காமல் பார்க்கவும், வேண்டும், குளம்பு தேயாமல் லாடம்கட்டவேண்டும், வண்டிகளை சவாரிகாலத்தில் அவசரநிமித்தம் அளவுகடந்து வேகமாய் ஓட்டினாலும் இடக்குக்குதிரைகளைத் தடபுடல்செய்யாமல் சமாதானத்தின் பேரில் அடக்கி இடக்குக்கிடங்கொடுக்காமலும் அபாயமில்லாமலும் ஓட்டவேண்டும்.

குதிரைக்குப் புல் இதலக்சமன்னியில் காலத்தில் கிடைக்கும்படி தயார் செய்துகொள்ளவேண்டும்.

9— தோட்டக்காரன்:— சமீபத்திலாவது வீட்டெதிரிலாவது தோட்டம் முதலியவைகளிலிருந்தால் பார்வைக்கழகாகப் பூச்செடி முதலியவற்றையும், பலனை உத்தேசித்து வாழை, எலுமிச்சை, முதலியவைகளையும் வைக்கிறார்கள். எப்படியிருந்தாலும் அந்தந்த வேலைகளுக்குத் தக்கபடி தோட்டக்காரனை நியமிக்க வேண்டும்.



அவன் எப்பொழுதும் கொத்தவும், தண்ணீர் பாய்ச்சவும் பார்வைக்கழகாக கத்தரிக்கக்கூடியவைகளை கத்தரிக்கவும், பழுப்பு முதலிய உதிர்ந்தவைகளைக் கூட்டி அப்புறப்படுத்தவும் புஷ்பங்களையும், பலன்களையும் பந்தோபஸ்தாய்க் காத்து ஒப்புவிக்கவும் வேண்டியவனாகையால் அவனுக்கு இவற்றைத்தவிர வேறு வேலை இருக்கக்கூடாது. இருட்டுக்காலங்களில் படுக்கைக்கு வரவேண்டும்.

வீட்டு வேலை செய்பவள், கூட்டுகிறவள் முதலியவர்கள் விஷயம் சகஜமாய்த் தெரியக்கூடியதாகையால் இங்கே எழுதப்படவில்லை.

## 2—வது அத்தியாயம்.

## கிராம சிப்பந்திகளின் வேலைகள்.

1—ஹெட்காரியஸ்தர்:— கிராம வரவு செலவுகளுக்கும் லாப நஷ்டங்களுக்கும் இவரே பாத்தியப்பட்டவர். கிராமங்களிலுள்ள நன்செய், புன்செய், மனைக்கட்டு, ஒப்பாரை முதலியவைகளையும், அவைகளின் பெயர், விஸ்தீர்ணம், தீர்வை, வரும்படி, நல இளப்பங்கள் முதலியவைகளையும், நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். இன்னின்ன நிலங்கள் குத்தகைக்கு கொடுக்கக்கூடியவைகள் என்றும், இன்னின்ன நிலங்கள் பண்ணை சாகுபடி செய்யக்கூடியவைகள் என்றும், இன்னின்ன நிலங்கள் புதிய சாகுபடிக்குத் தயார் செய்யக்கூடியவைகள் என்றும், இவர் தெரிந்து கொள்ளவேண்டும். குத்தகைக்காரர்கள், காவல், வெட்டி, பண்ணையாள் முதலானவர்களின் குணகுணங்களைத் தெரிந்து

கொண்டு அவரவர்களுக்குத் தகுந்தபடி நடத்தவேண்டும். காலத்திற்குத் தகுந்த பயிர்களைச் சாகுபடி செய்யவேண்டும். முன் வருஷங்களை அனுசரித்து இட்டப்படி செலவு செய்ய வேண்டும். அப்போதைக்கப்போது மராமத்துகள் செய்வதற்கும், அதிகச்செலவு ஏற்பட்டால் செலவழிப்பதற்கும் மேலாவிலிருந்து சாங்ஷன் பெற்றுச் செலவு செய்யவேண்டும். எந்தச்செலவாயிருந்தாலும் கணக்கப்பிள்ளையைக்கூடவைத்துக் கொண்டு கணக்கெழுதி அவசியமானால் கையெழுத்துப்பெற்று செலவு செய்ய வேண்டும். செலவு செய்வதற்கு இவருக்கு அதிகாரம் இருந்தாலும் தகுந்த காரணமின்றி தனிமையில் எவ்விதச் செலவுகளும் செய்யக் கூடாது.

அந்தப்படி செலவழிப்பதில் முக்கியமாய் கவனிக்க வேண்டிய

கிராம வரவு செலவுகளாவன:-

வரவு,

a பண்ணைச் சாகுபடியினல்

b குத்தகை-வாரமுள்பட

c பகுதி தோப்பு உள்பட

d நெல் வகையறா தானிய வித்து முதல்

(A & B அயிட்டங்களில் அடங்கியிருந்தால் நீக்கிவிடவும்)

e ஏர் கிருத்தகத்தினல்

f ஆதாய வரவு

g சில்லரை வரவு





செலவு.

a விரை தகாவி

b மராமத்து வாய்க்கால் வெட்டு உள்பட

c உழவு மாடுகொள் முதல்

d எரு, இலை முதலியன

e சம்பளம் காரியஸ்தர்கள் பண்ணையாள் காவல் வெட்டி மாட்டுக்காரன் வகையரா உள்பட.

f இனும்

g தர்மச் செலவு

h சில்லரைச் செலவு [illegible]ச்செலவு வகையராக்கள்.

இவைகளும் பின்னும் அவசியமான கிராமச்செலவுகள் போக பாக்கியை மேலாவுக்கு அனுப்பும்படி செய்யவேண்டியது.

இதர அயிட்டங்களுக்கு மேலாவிலிருந்து தொகைவந்து செலவழித்தால், அவைகள் கிராமவரவு செலவாகமாட்டாது.

கிராம சிப்பந்திகளுக்கு மாதமாதம் 10உ க்குள் சம்பளம் பட்டுவாடா செய்ய வேண்டும். ஷெடியார்களுக்கு அபாரதம் போடவும், நீக்கிவைக்கவும், அவசியமானால் பர்த்தருப்பு செய்ய மேலாவுக்கு எழுதி உத்திரவு பெற்றுக் கொண்டு, செய்யவேண்டும். சுயகாரியத்தை உத்தேசித்தோ தாக்ஷண்யப் பட்டோ பாரபக்ஷமான காரியங்களைச் செய்யக்கூடாது. கணக்கப்பிள்ளை எழுதும் கணக்குகளுக்கும் கார்பாண்டென்ஸுகளுக்கும் இவரே ஜவாப்தாரியான படியால் குறிப்பு, வருக்கு அல்லது பேரேடு, சில்லரைக் கணக்குகள் முதலியவைகளை

அன்றாடகம் கவனித்து இன்ஷியல் செய்து மேலாவுக்கு அனுப்ப வேண்டிய கணக்குகளை தவக்கப்படுத்தாமல் அனுப்பச் செய்யவேண்டும். கிராமங்களிலிருந்து மேலாவுக்கு அனுப்பும் தொகைகளுக்குப், தானியம் வகையறாக்களுக்கும் பந்தோபஸ்துக்காக சமயத்திற்குத் தக்கபடி தகுந்த நம்பிக்கையுள்ள மனுஷாளை அனுப்பவேண்டும். திருப்பவஷ்சர்கள் வரும்வரையில் தாமீன ஜவாப்தாரி என்பதை அறியவேண்டும். சாகுபடிக்கு ஆரம்பிக்குமுன் குத்தகைக்கு அடைந்த நிலங்களும் வாரத்திற்குவிட்ட நிலங்களும் போக, பாக்கி நிலங்களுக்கு கணக்குகொடுத்து அதற்குத் தகுந்தபடி உழவு மாடுகள், பண்ணையாள் முதலியவைகளை கிராம வழக்கத்திற்குத் தகுந்தபடி சித்திரை மாதத்திலேயே ஜாக்கிரதை செய்யவேண்டும் கிராம வழக்கப்படி செய்யும் சாகுபடிகள் தவிர புதிய சாகுபடிகளுக்கு அனுபோகத் தெரிந்திருந்தால் நேரில் பார்த்து நடத்தவேண்டும் அல்லது அவைகளில் தேர்ந்தவர்களைக் கொண்டு நடத்தினாலும் அடிக்கடி மேற்பார்வை பார்த்து வரவேண்டியது. பண்ணையிலிருந்தாலும் குத்தகைக்கு விடப்பட்டாலும், பாய்வாய்க்கால், வடிவாய்க்கால் வெட்டுக்களையும் நன்செய் மராமத்துக்களையும் மற்ற சீர்திருத்தங்களையும் முதலில் செய்யவேண்டும். நன்செய் மராமத்துகள் முடிந்தவுடன் தாக்குவாரியாகக் கணக்கப்பிள்ளை, காவற்காரன், வெட்டியான், முதலியவர்களை வைத்துக்கொண்டு அளந்து தவக்கப்படுத்தாமல் மேலாவுக்கு கணக்கனுப்பி, மேல்திகாரியால் பரிசோதனை செய்யத்தகுந்த சவகாசமிருக்கும்படி காலத்தில் அனுப்ப வேண்டியது பரிசோதனைக்குமுன் உத்திரவில்லாமல் குழிகளை நிரவா



வது, தண்ணீர் விடுவாவது கூடாது. மராமத்து முடிந்த நிலங்களுக்கும் மராமத்து அவசியமில்லாத நிலங்களுக்கும் அகப்படும் சௌகரியத்திற்குத் தக்கபடி கிடைபோடவேண்டும். பசுங்கிடையாக இருந்தால் அன்றாடகம் காலையில் காவல்வெட்டியை வைத்துக்கொண்டு சாணியை அடிக்கச் செய்யவேண்டும்.

குறுவைசாகுபடியுள்ள இடங்களில் புதுஜலம் வருவதற்குத் தாமதப்பட்டால், சொந்தப்படுகையிலாவது, இல்லாவிட்டால் பகுதிக்கு படுகையை வாங்கியாவது, அல்லது கிணறு முதலிய ஜலாதாரங்களை நாற்றங்காலுக்குப் பக்கத்தில் தயார்செய்துகொண்டாவது, காலத்திலநாற்றுவிட்டு, ஜலம்வந்தவுடன் நடவுக்குத் தயாராகயிருக்க வேண்டும். வயலில் ஜலம்விட்டவுடன் அக்கம்பக்கத்திற்குக் குறைவனவில்லை, உழவு முதலிய செய்நேர்த்திகள் செய்து ஒழுங்காய் கட்டி களையெடுத்து, ஜலக்குறைவின்றி பார்த்து வரவேண்டியது. குறுவை அறுப்பு முடிந்தவுடன் முதல்நாள் அறுத்தவயலை மறுதினம் உழுது பக்குவமாகச் சேறுசெய்து நாற்றுநட்டு களை யெடுக்கவேண்டும்.

ஒருபோகம் ஆகும் காலத்தில் செய்நேர்த்திசெய்து விரைவிட்டு பக்குவமாகச் சேறுசெய்து நட்டு களை யெடுத்து அவசியமானால் இரண்டாவது தடவையும் களையெடுக்கவேண்டும்.

சிலவிடங்களில் விரைவிட்டு, நாற்றைப்பறித்துநடாமலே வயல்களை அதிகமாக உழுது; சேறுசெய்து, விரைப்பது வழக்கம். அவ்விதம் விரைத்துப்பயிரானவுடன் களையெடுத்து நடவுபோல் நெருக்கமாக உள்ள பயிரைக்கலப்பித்தும், பயிரில்லாத இடங்களில் எடுத்த பயிரை நட்டும், பயிர்செய்து சாகுபடிகணக்கை மேலாவுக்கு அனுப்பவேண்டும்.

வார்சாகுபடி நிலங்களுக்கும், அவசியமானால் குத்தகைநிலங்களுக்கும் காலத்தில் சாகுபடிக்கணக்கு தயார்செய்து மேலாவுக்கு அனுப்பவேண்டும். மகசூல்தயாரானவுடன், சாகுபடிக்கணக்கை அனுசரித்து ஸ்தலவாரியாய்க் கணக்கப்பிள்ளையைக் கூடவைத்துக் கொண்டு புள்ளிபார்த்து, அறுவடைக்குமுந்தி மேன் புள்ளிபார்க்கச் சௌகரியமிருக்கும்படி, காலத்தில் கணக்கனுப்பவேண்டும்.

முதல் முதல் அறுப்பதற்கு நாள்பார்த்து, மேலாவுக்குத் தெரியப்படுத்தி அறுத்தனுப்புதிர் அனுப்பி உத்தாவுபெற்றுக்கொண்டு பிறகு அறுப்புவிடவேண்டும். அறுப்புவிடுமுன்காலையில் அறுப்பு ஸ்தலத்தைநேரில் சுற்றிப்பார்த்து மாட்டுமேய்வு, திருட்டுமுதலியவைகள் இருந்தால் அதற்குத்தகுந்த ஏற்பாடுசெய்து அறுப்புவிடவேண்டும்.

முதல் நாள் கண்டுமுதலையும், அன்றையதினம் அறுப்பு அறுக்கும் ஆள்கள் நிலம், புள்ளி முதலியவிவரங்களையும் கணக்குதயார்செய்து தினந்தோறும் வெட்டியான் மூலமாய்க்கணக்கப்பிள்ளையைக்கொண்டு தயார்செய்து, கையெழுத்து செய்து, மேலாவுக்கு அனுப்பவேண்டும். அறுப்புக்காக மேலாவிலிருந்து அதிகாரிகள் வந்திருந்தால் அவர்கள் சொல்லுகிறபடி கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

அறுப்பு வயல்களிலும், களங்களிலும் திருட்டு முதலியவைகள் நடக்காமல் பந்தோபஸ்தாய்ப் பார்க்கவேண்டும். கட்டுக்கட்டும் போது களத்தில் ஒருவரும், வயலில் ஒருவருமாக இருக்கவேண்டும். ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் செலவிடக்



கூடாது. கட்டுகள் அடிக்கும்போது சேதமில்லாமலும் போரில் நெல்லேறும்லும் கவனிக்க வேண்டும். அளக்கும்போது அளக்குமிடத்தில் கணக்குப்பிள்ளையும் பட்டாமணியும் மற்ற ஒவ்வொருவரும் தனித்தனியாக பந்தோபஸ்தாய்ப்பார்க்கவேண்டும். அவசியமானால் கலம் ஒன்றுக்கு ஒன்று அல்லது ஒன்றரை மரக்கால் நெல்லேன் இருக்கும்படி முதலிலிருந்து கடைசிவரையிலும் ஒரே நிதானமாக வெட்டியான் அளக்கும்படிக்கும், காவற்காரன் தள்ளிக்கொடுக்கும்படிக்கும், உத்திரவு செய்யவேண்டும். பண்ணை குத்தகைவாரம்உள்பட அளவு முடிந்தவுடன் கணக்கு முடித்து கணக்கிலும் வாரோலையிலும் இருந்தவர்களுடைய கையெழுத்து வாங்கி, பட்டடையில் வாரோலைவைத்து, மேல் மனுஷியாளைக் கொண்டோ, தானுகவோ குறிபோட்டுப், பட்டடைகளை எண்ணிக் காவற்காரன்வசம் ஒப்புவிக்கவேண்டும். குறிபோட்ட சேகரப்பட்டடையை மறுபடி பிரிக்கவோ, எடுக்கவோ இவருக்கு அதிகாரமில்லை. ஆனால் திருட்டு மழை முதலியவைகளினால் சேதமுண்டானதாகத் தெரிந்தால் கணக்கப்பிள்ளை காவற்காரன் முதலியவர்களைக் கூடவைத்துக்கொண்டு பட்டடையைப்பிரித்து வரவு, செலவு செய்து உடனே மேலாவுக்கு விவரந்தெரிவிக்க வேண்டியது. விரைகாயவைக்க வேண்டியதிருந்தாலும், சேர் களஞ்சியங்களுக்காவது விலைக்காக அளக்க வேண்டியதிருந்தாலும், மேலாவிலிருந்து உத்தரவுபெற்று மனுஷியாள் வந்திருந்தால் கூடவைத்துக்கொண்டுகணக்கப்பிள்ளை காவல் வெட்டி முதலியவர்களை வரவழைத்துப்பட்டடையைப் பிரித்து மறுத்தளக்கக் குறையாமல் அளந்துகாவல்காரனுக்குகொடுக்கவேண்டிய பட்டடை

அடிக்காக பட்டைகள் தீர்த்தவுடன் காவற்காரனுக்கு வழக்கப்படி அடிமீதியைக் கொடுத்து, பாக்கியை கணக்கிலும் அசல் குறிப்பிலும், வரவு, செலவு செய்து வாபேரேட்டிலும் எழுதி கூட இருந்தவர்கள் கையெழுத்து வாங்கி மாதாந்தரக் கணக்குடன் வாயோலைகளை மேலாவுக்கு அனுப்ப வேண்டும்.

கிராமங்களுக்கு வாரம்குத்தகை உள்பட வேண்டிய விளைகளை முதலில் காயவைத்து பந்தோபஸ்து செய்தபிறகு மற்றவேலைகள் பார்க்கவேண்டும்.

போரடி வேலை அதிகத் தொந்தரவான வேலையானதால் இராப்பகலாய் கட்டிக்காத்து கூடியவரையில் சேதமில்லாமல் அடித்து உடனுக்குடனாவது ஒருவாரத்திற்கு ஒருதரமாவது கண்டுமுதல் செய்து செலவு போக மீதியை குறிப்பில் வரவு வைக்கவேண்டும்.

போரடித்தவுடன் பண்ணை ஆட்கள் கணக்குகளை தீர்த்து மறுபசலி வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

பண்ணை நிலங்களிலோ குத்தகை நிலங்களிலோ வயற் பயறு, அவரி, முதலியவைகள் சாகுபடி செய்திருந்தால் கிராம வழக்கப்படி புள்ளிபார்த்து விடுகிறதோ கூட இருந்து அமானியாய் கண்டுமுதல் செய்கிறதோ அந்தப்பிரகாரம் கணக்கப்பிள்ளையையும் கூடவைத்துக்கொண்டு ஒழுங்காய் நடத்தி உடனுக்குடன் மேலாவுக்கு கணக்குடன் தெரியப்படுத்தவேண்டும்.



தானியங்களை விலைக்கு விற்பதில் களத்துமேட்டில் விற்பதைவிட சேகரஞ் செய்து, ஆடி, ஆவணி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் விற்பதனால் காலத்தை அனுசரித்து விலைகளிலிருந்த போதிலும், வட்டி, பாடு முதலியவைகளால் கலம் ஒன்றுக்கு ஆறு அணா வரையில் சேதமாகும். அதை அனுசரித்து சம்பல் காலங்களில் களத்துமேட்டில் விற்பது நலம்.

முக்கியமாய் வாரசாகுபடிகளுக்கும், அவசியமானால் குத்தகைசாகுபடிகளுக்கும், மேற்கண்ட ஒவ்வொருசமயத்திலும் நேரில் கவனித்து சாகுபடிக்கணக்கு, புள்ளிக்கணக்கு, கண்டுமுதல்கணக்கு, கடைசி வரவு செலவுகணக்கு, இவைகளைத்தவறாமல் காலத்தில் அனுப்பி ஒருவருக்கும் நஷ்டமின்றி நடந்துவரவேண்டியது.

வாரத்திற்குப் பேர்வழிகளைத் திட்டப்படுத்துவதும், குத்தகைக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதும், இவருடைய பொறுப்பு. ஏனென்றால் பாக்கிகளை வசூலிக்கவும், பிசகுகளைக் கண்டிக்கவும் இவருக்கு சௌகரியமாக இருக்கும்.

பெரியகுத்தகைதாரர்கள் (Lessees) நேரில் மேலாவிலிருந்து குத்தகை முடித்துக்கொண்டு வந்தால், அவருக்கு வேண்டிய உதவிகளை எஜமானத்துரோகமின்றிச்செய்து எஜமானருக்குச் சேரவேண்டிய குத்தகையை சல்லிசாய் வசூலிக்கமுயற்சிசெய்ய வேண்டும்.

புன்செய், தோப்பு முதலியவைகளைப் பகுதிக்கு அடைப்பதிலும், வசூலிப்பதிலும் அவ்வாறே.

கிராமங்களிலுள்ள பண்ணைகளில் குடியிருப்பவர்களுக்கு அவற்றில் சாசுவத அநுபவபாத்தியம் உண்டாகாதபடிக்கும், அலக்ஷியத்தினாலாவது கவனக்குறைவாலாவது, வேறு எவ்விதகாரணங்களினாலாவது எஜமானருடைய பாத்தியம் இழக்காதபடிக்கும் சர்வ ஜாக்கிரதையாய் கவனித்து காலத்தையும் விவகாரங்களையும் அனுசரித்து அவசியமான விஷயங்களுக்கு மேலாவிலிருந்து உத்திரவு பெற்றுக்கொண்டு அடிக்கடி தஸ்தாவேஜுகளை புதுப்பிக்க வேண்டும்.

ஆனால் (உண்மையில்) அவசியமான காரியங்களிலும், பாத்தியங்களை ஸ்தாபிக்க வேண்டிய விஷயங்களிலும், கோர்ட்டுகளுக்குப்போக நேரிட்டால் நிதானித்து மேலாவிலிருந்து உத்திரவு பெற்றுக்கொண்டு நடவடிக்கைகள் நடத்தவேண்டும். நடக்கும் தர்மங்களை குறைக்காமலும் கெடுக்காமலும் இருக்கவேண்டியதுடன் சௌகரியப்பட்டால் விர்த்திசெய்வதும் முக்கியம்.

கிராமங்களில் பாக்கிகளை வசூலிப்பதினாலாவது வேறு எந்தக்காரணங்களைக் கொண்டாவது கலகமுண்டாகாமலும், சிவில் கிரிமினல் கோர்ட்டுகளுக்குப் போகாமலும், தன்னால் கூடிய வரையில் முயற்சி செய்யவேண்டியது.

சாசுவத பலனைத்தரக்கூடிய தென்னை, மா, இலுப்பை, பலா, புளி, முதலியவைகளை விர்த்திசெய்ய இடமிருந்தால் விர்த்திசெய்தும், ஏற்கனவே உள்ளதாயிருக்கிற செடிகளை அழியாமல் பார்த்தும் வரவேண்டியது.



கிராம லாப நஷ்டங்கள், வேலைக்காரர்களுக்கு சேர வேண்டிய சம்பளம் முதலியவைகளினால், ஈடாகாதென்பதை இவர் உள்பட மேலான அதிகாரிகளுமறிந்து, அவர்களுடைய சம்பளம் முதலியவைகளை தவக்கப்படுத்தாமல் கொடுத்து, அந்த விசுவாசத்தின் பேரில் வேலைகளை அதிக நஷ்டமின்றியில் நடத்த முயல வேண்டும். தவிரவும் தங்கள் அதிகாரத்தினாலோ சாமர்த்தியத்தினாலோ வேலைக்காரர்களுடைய நடவடிக்கைகளை நாளுக்கு நாள் மாற்றி விடலாம்.

2—கிராம கணக்குப் பிள்ளை:— கிராம சம்பந்தமான எல்லா ரிகார்டுகளும் இவரிடம் இருக்கவேண்டும். தான் சம்பந்தப்பட்ட கிராமங்களிலுள்ள ஒவ்வொரு நிலத்தின் விஸ்தீர்ணம், தீர்வை, வருமானம் முதலியவைகளை அநுபோகத்தினாலாவது கணக்குகளைக் கொண்டாவது இவர் தெரிந்து கொள்ளவேண்டும். கிராம வரவு செலவு முதலிய சகல கணக்குகளும் இவர் எழுதிவரவேண்டியது. கையிருப்பு ரொக்கம், இவரிடம் இருக்கலாம். இவருடைய தகவலன்றியில் எவ்வித செலவுகளும், செய்யக்கூடாது. தினந்தோறும் இராத்திரிக்குள் வரவு செலவு கணக்கு முடித்து ஹெட்காரியஸ்தரின் இனிஷியல் வாங்கிப்பூர்த்தி செய்ய வேண்டியது. மேலாவிலிருந்து வருகிற எஜமானர், ஏஜெண்டு, மற்றுங்கணக்கைப்பரிசோதிக்க பாத்தியப்பட்டவர்களுக்குமட்டும், கணக்குகளைக்காண்பித்து அதற்கு ருஜுவாக இனிஷியல் பெறவேண்டும். மாதாந்தரக்கணக்குகளை மறுமாதம் 5 உக்குள் சம்பந்தப்பட்ட வவுச்சர்களுடன் ஒழுங்குப்படி மேலாவு

க்கு அனுப்புவதின் (Abstract) முதற்பக்கத்தில் சொல்லியபடி தயார்செய்து எழுதியனுப்பவேண்டும்.

வாய்க்கால் வெட்டிக்கணக்கு, மராமத்துக்கணக்கு, குத்தகை, வாரம் முதலிய கூடுதல் கணக்கு, (பண்ணைகுத்தகை உள்பட) சாகுபடிக்கணக்கு, புள்ளிக்கணக்கு, கண்டுமுதல் கணக்கு, பட்டாக்குறிப்பு முதலிய கணக்குகளையும், கூடுதல் வசூல் பாக்கி, கணக்குகளையும், அனுப்புவதில், முந்திச்சொல்லியிருக்கிறபடி அவசியமானவைகளுக்கு ஹெட்காரியஸ்தரையும் கூடவைத்துக்கொண்டு தயாரித்து கையெழுத்து வாங்கிஉடனுக்குடன் மேலாவுக்கு அனுப்பவேண்டும். வருஷம் (பசலி-தமிழ் அல்லது இங்கிலீஷ்) முடிந்தவுடன் வருஷப்பட்டோலை முடித்து, மறுமாதம் 20க்குள் மேலாவுக்கு அனுப்பவேண்டும். சாகுபடி முதலிய வேலைகாலங்களில் வயலுக்குப்போய், இடம், வேலையின் விபரம், பண்ணையாட்கள், கூலியாட்கள், ஏர்முதலியவைகளை, காலையில் நேரில் பார்த்துக் கணக்குப் பதிந்து வரவேண்டியதுடன், மாலையிலும் காலையில்வந்தவர்களை ஆஜர்பார்க்கவேண்டும்.

தஸ்தாவேஜிகள் எழுதிவாங்காமல், குத்தகை நிலங்களிலாவது, வாரத்திற்கு விட்டநிலங்களிலாவது பிரவேசிக்கவும், மனைகளில் குடியிருக்கவும்விடக்கூடாது. இவ்விஷயங்களில் ஹெட்காரியஸ்தர் அசிரத்தையாயிருந்தால், அவரைத் தண்டிக்கல் செய்தாவது, மேலாவுக்குத் தெரியப்படுத்தியாவது, அனுபோகத்தையும், வழக்கத்தையும் அனுசரித்து விவகாரத்திற்கு இடமில்லாமல் ஒருவருக்கும் நஷ்டம் ஏற்படாமல் சரியானபடி தஸ்தா



வேஜிகள் எழுதிவாங்கவேண்டும். மனைப்பகுதி, தஸ்தாவேஜிகளை மிகவும் கவனிக்கவேண்டும்.

ஒருவருஷத்திற்கு மேற்பட்ட கெடுவுள்ள தஸ்தாவேஜிகளை அவசியம் ரிஜிஸ்தர் செய்யவேண்டும். சில பேர்வழிகள் பாப்ராயிருந்து காரியங்களுக்கு அவசியமானவர்களாயிருந்தால் எல்லைட்டு இல்லாவது தஸ்தாவேஜி முடித்து பிறகுவசூலிக்கவேண்டும். குத்தகை, பகுதி, வாரம் முதலிய தஸ்தாவேஜிகளில் கண்ட தொகைகளை வரவு வந்தவுடன் குறிப்பில் பதிந்து உடனே தஸ்தாவேஜிகளிலும் வரவு வைத்துக் கையெழுத்து, சாக்ஷிகள் வாங்கவேண்டியது. கிராமங்களிலுள்ள ரிகார்டுகளுக்குப் பேரீஸ்து தயார்செய்து மேலாவுக்கு அனுப்பி தஸ்தாவேஜிகளை ஒருவருஷத்திற்கொருதரம் ஒத்துப்பார்த்துக்கொள்ள வேண்டியது. அவசியமாகத் தோற்றும் தஸ்தாவேஜிகளையும், நடைமுதல் தஸ்தாவேஜிகளையும், கணக்குகளையும் தவிர மற்றவைகளை வருஷமுடிந்தவுடன் மேலாவுக்கு அனுப்புவதால், ரிகார்டுகள் ஜாக்கிரதையாயிருக்குமென்பதுடன், தன்னுடையஜவாப்தாரியும் குறையும்.

கண்டுமுதல் போரடி முதலியவைகளில், பட்டடையை களத்திலிருந்தாவது விற்றுமுதலுக்கோ, வேறுசெலவுகளுக்கோ, எடுக்கும் தேதிகளில் அசல் குறிப்பில் வரவு வைக்கவேண்டும்.

பகுதிமுதலிய ரொக்கவருபடிகளை வசூலிப்பது இவருடைய கடமை. அதற்கு ஹெட்காரியஸ்தர் மேற்பார்வையும், காரியஸ்தர், காவற்காரன் இவர்கள் உதவியும், அவசியம் வேண்டும். தகராறுபேர்வழிகளிடமும், வசூலிக்கமுடியாத பேர்வழிகளிடமும் தொகைவசூலிக்க ஹெட்காரியஸ்தர் அவசியம் கூடப்போக

வேண்டும். அந்தந்தப் பசலி பாக்கிகளை அந்தந்தப் பசலியிலேயே ஜாடைசெய்யத்தகுந்த முயற்சியெடுத்துக்கொள்வதில்; சிலபேர் வழிகளிடம் மகசூல்கையாகுமுன் மதித்து வசூலிக்க சிரத்தை எடுக்கவேண்டும். காலாவதியாகும் தொகைகளுக்கு இல்மேஜவாப்தாரியானபடியால், முன்ஜாக்கிரதையாய் எல்லாப்பாக்கிகளையும் விவரமாய் காலா காலத்தில் ஜாப்தா தயார்செய்து மேலாவுக்கு அனுப்பி, உத்திரவுப்படி நடக்கவேண்டும். அவசியமானால், கிராம ஜாமீன் முதலியவைகள் தயாரிக்கவும் பின்னும் வேண்டிய நடவடிக்கைகள் நடத்தவும் உதவ வேண்டும்.

3—காப்பார் (காரியஸ்தர் உதவி):—கிராமங்களில் நடக்கும் வேலைகளுக்கு தினந்தோறும் வேலைகளை முதல்நாள் இராத்திரியே காரியஸ்தர்கள் மூலமாய்த் தெரிந்துகொண்டு, உடனே ஆட்களுக்கும் தெரியப்படுத்தி கிராமவழக்கத்தையும் வேலையின் சௌகரியத்தையும் அநுசரித்து, காலை 6 மணிக்குள்ளும், சிலசமயங்களில் அதற்கு முந்தியும், வேலைசெய்யும் இடத்திற்குப் போகவேண்டும். உழவுகாலத்தில் சில ஆட்களைக் கொட்டிலில் படுக்கச்செய்து, சரிவர வைக்கோல் போடச்செய்து, விடியுமுன் மாடுகளை அவிழ்த்துத் தண்ணீர் காட்டி, மாடுகள் சகிதமாய் வயலுக்குப்போகவேண்டும். ஆட்களை வேலைவாங்கவேண்டியதில், மேலானவர்களின் உத்திரவை அநுசரித்து, ஆட்களைச்சேர்த்தோ வெவ்வேறு பாகப்பிரித்தோ, வேலையில்திருத்திக்களைக்கவிடாமலும், சிரத்தையுடனும் பார்த்துவரவேண்டும். வேலைத்தலையில் கணக்குப்பதிலாய் வேறு ஆள் வந்தவுடன் காலைச்சாப்பாட்டிற்குப்போகவேண்டும். சாப்பிட்டுவந்தவுடன் மத்தியானத்தில்





ஆட்கள் சாப்பிட்டவுடன் தானும் மத்தியான சாப்பாடு செய்து கொண்டு ஆட்கள் அந்திவேலை தொடங்குமுன்வந்து வேலையைக்கவனித்து வேலைமுடிந்தவுடன் கூலிகொடுக்கவேண்டியதிருந்தால் ஆட்களை கூட அழைத்துவந்து கூலிமுதலியவைகள் கொடுத்துப் புட்டுவாடா செய்யவேண்டும்.

எருவடி, உழவு, போரடி முதலிய காலங்களில் மாடுகளின் சமீபத்தில் தான் படுத்திருந்து, இராக்காலத்தில் இரண்டுதடவை எழுந்து, படுக்கை ஆட்களின் உதவியைக்கொண்டு வைக்கோல்போடுவேளை தவறாமல் தொட்டியைக் கவனித்துத் தண்ணீர்காட்டி, பகலிலாவது இரவிலாவது, வழக்கமும் சௌகரியம் இருந்தால் கூடைத்தீனி தினம் ஒருவேளை வைத்தும், வரவேண்டியது. உழவுகாலங்களில் கூடைத்தீனியும், மற்றக்காலங்களில் தவறாமல் தொட்டித்தண்ணீரும், அவசியம் இருக்கவேண்டும். மாட்டுக்காரன்கள் சரியானபடி மாடுகளை மேய்த்தும், குளிப்பாட்டியும் ஒழுங்காய் நடத்தி வருவதை அடிக்கடி கவனிக்கவேண்டும்.

கிராமக்கட்டடங்களில் தன்னால் செய்யக்கூடிய வேலைகளிருந்தால் செய்யவேண்டும். மண்வெட்டி, கலப்பை, நுகத்தடி, கடப்பாரை, அரிவாள், முதலியசாமான்களை ஜாக்கிரதையாய்ப் பத்திரப்படுத்தியும், பழுதுபட்டவைகளை வேலைக்குத்தவக்கப்படாமல் முன்னாடியே சீர்திருத்தி, வேலைகளுக்குச் சாமான்களைக் கொடுத்துவாங்கிவைக்க வேண்டியது.

வேலைகளுக்குவாராத ஆட்களை நயமாகவோ கண்டித்தோ அழைத்துவரவும் திருடினவர்களை உத்தரவுப்படி தண்டிக்கவும் வேண்டும்.

அவசியமானால் காவற்காரனுடன் உதவியாய்ப் படுக்கவேண்டும்.

தானாகவோ கர்வல் வெட்டிகளுடனோ வசூல் செய்யும்படி நேரிட்டால், அப்படி வசூலித்த தொகைகளை உடனே கணக்கில் பதியவைத்து சம்பந்தப்பட்டவர்களுக்குத் தவக்கப்படாமல் ரசீது கொடுக்கவேண்டும்.

காரியஸ்தர்கள், கணக்கப்பிள்ளை முதலியவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்யவேண்டும்.

4—காவற்காறன்;—கிராமங்களிலுள்ள கால்நடைகள், நிலங்கள், களம், சேர், களஞ்சியம், வைக்கோற் போர், தோப்புகள், வயல்களிலுள்ள மரக்கழைகள், முதலியனவெல்லாவற்றையும் பந்தோபஸ்தாகவும் சேதமில்லாமலும் பார்க்கவேண்டும். திருடுபவர்கள் எவ்வளவு சாமர்த்தியசாலிகளாயிருந்தாலும் அவர்களிடம் விடாமல் சொத்துக்களை ஜாக்கிரதையாய் காத்து ஒப்புவிக்க வேண்டும்.

பயிர்க்காலங்களில் பயிர்களை ஆடுமாடுகள் அழிக்காமலும், பிறர் புல்லறுக்காமலும், விளைக்காலத்தில் கதிர்களைக் கிள்ளி, பிடுங்கி, உருவி, திருடாமல் காத்து, அறுப்பு ஆரம்பித்தவுடன் மேல்மனுஷருக்குக் காண்பித்து, கூட இருந்து அறுக்கும்படி செய்யவேண்டும். அறுப்பு ஆட்கள் திருடாதபடி பார்த்துக்கொள்வதுமன்றி, கதிர் சிந்திச் சேதப்படாமல் கட்டுக்கட்டுவித்து, களத்தில் தன்னால் வேண்டிய உதவிகளைச் செய்து, அடிப்பட்டடையிலும் குறி போட்டவுடன் மேற்பட்டடையிலும் பூராவும் வைக்கோல் போட்டு மூடவேண்டியது. பிறகு பட்டடைகளை எண்ணி ஒப்புக்



கொள்ளவேண்டும். அளக்கும்போது கூட இருந்து நெல் தானியங்களைக் கொடுக்க வேண்டும். பட்டடைபிரிக்கும் காலத்தில் அதிகாரம் பெற்றவர்களை வைத்துக் கொண்டுபிரித்துச் சேதமில்லாமல் பாதுகாக்கப்படவேண்டும்.

சில இடங்களில் பிரசுதாரர்களுக்கு புதிர் கொண்டு போய்க்கொடுக்கும் வழக்கமிருந்தால் கொடுக்கவேண்டும். காவற்காரனிடம் ஒப்புவித்தவைகளை, ஒப்புவித்தவர்கள் அல்லது சம்பந்தப்பட்ட மேல்மனுஷன் தவிர அக்கக்காரணத்தைக் கொண்டும், சொற்படியும், உத்தரவில்லாமல் மற்றவர்கள் எடுக்கும்படி விடக்கூடாது.

வயல், களம், முதலியவைகளைக் காக்க ஒத்தாசை வேண்டினால் தன்னுடைய ஜவாப்தாரியின் பேரில் ஆள் வைத்துக் கொள்ளவேண்டும். களம் தீர்த்தவுடன் சேரடியிலாவது கிராமக்கட்டடத்திலாவது இராத்திரிக்காலங்களில் படுக்கவேண்டும். வாய்க்கால்வெட்டு, மடைமத்து, எருவடி, முதலிய வேலைகளிலும் எருதுபடுகாலங்களிலும், இவன் காரியஸ்தர் உத்திரவை எதிர்பார்த்துக்கொண்டே இருக்கவேண்டியது. சௌகரியப்பட்டால் ஆட்களுடன் தானும் வேலைசெய்து தனியாகக் கூலிபெற்றுக்கொள்ளவேண்டியது. கார்பார் இல்லாத இடங்களில் அந்தவேலையையும் இவனே செய்யவேண்டியது.

குத்தகை நிலங்களையும் இவ்வாறே கவனிக்கவேண்டும். குத்தகைதாரர்களால் தனக்கு கொடுப்பவைகளைக் கிராமவழக்கப்படி நேரிலோ அதிகாரிகள் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

புன்செய் சாகுபடி, அறுவடைகளையும் இவ்வாறே பார்க்க வேண்டும். தோப்புமுதலிய பலவிருக்ஷங்கள் பண்ணையிலிருந்தாலும் குத்தகையிலிருந்தாலும் அதில் சேரிடும் எல்லாத்திருட்டுகளுக்கும் இவனே ஜவாப்தாரியாகையால், அவைகளைக்கண்டுபிடித்து மேலாவுக்குத்தெரிவிக்கவேண்டும். பட்டமரங்களை மேலாவுக்குத் தெரிவித்து வெட்டும்வரையில் காத்து ஒப்பிக்கவேண்டும். ஏகபோக கிராமங்களில் வரப்புகளிலுள்ள புல்லுகளை அன்னியர் அறுக்காமல்காக்கவேண்டும்.

தான்யம், ரொக்கம் முதலியவைகள் மேலாவுக்காவது இதர இடங்களுக்காவது அனுப்பும்போது சௌகரியத்திற்குத்தக்கபடி அவசியம் கூடப்போக வேண்டும்.

ஒப்பனை கிராமங்களில் ஒருவருக்கொருவர் விரோதமின்றியும் நஷ்டமுண்டாகாமலும், துரோகமில்லாமலும், காவல் பார்த்து ஒருவருடைய ஜவாப்தாரியில் கட்டுப்பட்டுநடக்கும்படி செய்து கொள்ளவேண்டும்.

5—வெட்டியான்;—மிராசுதாரர் வீட்டுக்கும் இதரஇடங்களுக்குத் தபால்கள் (கணக்குகள் உள்பட) கொண்டுபோகவும், வாங்கி வரவும்வேண்டும். களம்முதல்காலங்களில் ஒவ்வொருநாளும் களக்கடைகணக்கும், வைக்கோல், விறகு,(அவசியமானால்) கொண்டுபோகவேண்டும். விறகுஉடைக்கவும், மருந்துவேர்கள், பச்சிலைகள்கொண்டுவரவும், கட்டடங்களில் இராத்திரியில் படுக்கவும், தண்டோரா போடவும், ஏவின இதரவேலைகள்செய்யவும், வேண்டும்.

இராக்காலங்களில் தண்டோராப்போட்டு காவற்காரன்முதலியவர்களை உஷார்படுத்தவும். மாட்டுக்கொட்டிலில் மாட்டுக்காரனு

57



டன் சேர்ந்து படுத்து மாடுகளுக்கு வைக்கோல்போடவும் வேண்டும். யாராயிருந்தாலும் திருடுபவர்களிடம் தாக்ஷண்யப் படக்கூடாது.

குத்தகைதாரர்கள், வேலைக்காரர்கள் முதலியவர்களை அழைத்து வரவும், கிடைச்சாணிகளை வயலில் அடிக்கவும், அறுவடைக்காலங்களில் காவற்காரனுடன் சேர்ந்து திருட்டுக்கிடமில்லாமல் முழு நம்பிக்கையாயிருந்து பார்த்து வரவும், உத்திரவுப்படி நிதானந்தவறாமல் ஒரேகணக்காக அளவு அளக்கவும், கூலி போடவேண்டியவைகளுக்கு சாவரிப்பால் கொடுத்துவர வேண்டியது.

குத்தகைப் பேர்வழிகளிடமும், [illegible] களஞ்சியத்திற்கும், தககூலி முதலிய செலவுகளுக்கும், அறுக்குங்காலங்களில் கிராமவழக்கத்தையும், [illegible] உத்திரவையும் அனுசரித்து ஒருவருக்கும் நஷ்டம் வராமல் [illegible]த்து அளக்கவேண்டும்.

67733

சில வியாபாரிகள் வெட்டியானைச்சரிப்படுத்திக்கொண்டால் அதிகமாக வேலிருக்கும்படி அளந்து கட்டிவிட்டால் [illegible] மிராசுதாரர்கள் சொல்லுகிற அதிக [illegible]க்கு ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவ்விஷயத்தில் தன்னுடைய [illegible] உதாசீனித்து எஜமானத்துரோகமாய் எஜமானருக்கு நஷ்டம் உண்டாகும்படி வெட்டியான் அளக்கக்கூடாது இதுவிஷயத்தைக்கிராமாதிகாரிகளும், மேல்பறுதாரும், முக்கியமாய்க்கவனிக்கவேண்டும்.

கிராமத்தில் இறக்கும் மாடுகள் வெட்டியானுடையதாகும். உழவுக்கு வேண்டிய வடக்கயிறுகள் கொடுக்கவேண்டியது.

X:32a2.5;2
N15

இவனுடைய ஊதியம். சாகுபடி வேலை காலங்களில் ஆட்களுடன் கூடவேயிருந்து உதவிகள்செய்யவேண்டியதுடன், தானும் வேலைசெய்தால் வழக்கம்போல் தனக்கு கூலியும் பெறலாம்.

6—நீராணிக்கக்காரன்அல்லது பாய்ச்சற்காரன்;—நிலங்களில் அநுபோகம் நன்றாய்த்தெரிந்து, மேடுபள்ளங்களையும், பாய் வாய்க்கால் வடிவாய்க்கால்களின் அநுபோகத்தையும், பாத்தியத்தையும், அறிந்தவனாயிருக்கவேண்டும். வாய்க்கால் தலைப்பில் ஜலம்வந்தவுடன், கிராமங்களில் கண்டபடி வெங்காரிபாய்ந்து, பூமியின் சாரம் கெட்டுப்போகாமல் பந்தோபஸ்துசெய்து கொள்ள வேண்டும். நாற்றங்கால், குறுவை, சம்பா, வயல்கள் முதலியவைகளுக்கு வரும் ஜலத்திற்கும், பாயவேண்டிய நிலத்திற்கும் தக்கபடி ஹெட்காரியஸ்தர் உத்திரவின்பேரில் மடைதிறந்து பாய்ச்சவேண்டும்.

நாற்றங்கால்களிலும், வயல்களிலும், உழவுகாலங்களில் உழவுக்கு வேண்டியவரையிலும், சேறுகாயாமலும் நீர்பாய்ச்சி, எரு, தழை, கிடை முதலிய செய்நேர்த்திசெய்யப்பட்ட நிலங்களில் பாய்ந்த ஜலத்தைவடியவிட்டால் சாரம்போய் விடுமாகையால், வேண்டிய ஜலம்பாயவிட்டு உழவுமுடிந்து நட்டபின்நட்டவயல் காயாமலும் முழுகாமலும் கவனிக்கவேண்டியது. விதைவிட்டநாற்றங்காலை அதிகசிரத்தையாய் அடிக்கடி பார்க்கவேண்டும். களைபெடுத்தபிறகு, பயிருக்குத்தகுந்தபடி தண்ணீர் கட்டி, விளைந்தவுடன் ஜலம் ஜாடாவும்வடியவிடவேண்டும். மேற்கண்டநடவடிக்கைகளை ஹெட்காரியஸ்தர் உத்திரவுப்படி நடத்தவேண்டும். உள்வாய்க்காலிலுள்ள மேடுபள்ளங்களை கொஞ்சம்கொஞ்சமாய் சீர்திருத்திக்கொள்ள வேண்டும். ஜல அதிகக் காலங்களில் உள்வாய்க்கால், 



தலைப்புவாய்க்கால்களை வெட்டவும் வெள்ளக்காலங்களில் வடிவாய்க்கால்களை வெட்டவும்; மறிசல், உடைப்பு முதலியவைகளை அடைக்கவும் திறக்கவும், ஒருவனால் சாத்தியப்படாதாகையால், வேண்டிய ஆட்களுடன் அவசியமானால் கார்பாரியாவது காரியஸ்தராவது கூடஇருந்து வேண்டிய உதவிகளைச்செய்து கொடுக்கவேண்டும்.

தண்ணீர்பாய்ச்சலினால் வரும்லாபநஷ்டங்களுக்கு இவனே ஜவாப்தாரி என்பதை அவனுக்கு தெரிவித்து அவனைக்கண்டித்து வேலைகள்வாங்கிவரும் மேல்அதிகாரியானவர் அந்தவேலைக்குத்தகுந்த அசாமியாயிருப்பவனை நியமிக்கவேண்டும்.

7. பண்ணை ஆட்கள்:— முற்காலத்தில் மிராசுதார்கள் பண்ணையாட்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து, கல்யாணம், சாவு, வாழ்வு, முதலியவைகளுக்கு முழு உதவியும் செய்து; தங்கள் சொந்த அடிமையாகச் செய்துகொண்டு; எவ்விஷயங்களுக்கும் அவர்கள் இதரரிடம் போகாதபடி வேண்டியகாரியங்களைச்செய்து கொடுத்து, அவர்களைச்சம்ரக்ஷிப்பதில் தாயைப்போலப் பரிவுடன் நடந்துவந்தார்கள். அதனால் அவர்கள் நாயைப்போல் நன்றியறிதலுள்ளவர்களாய் எப்படிப்பட்ட வேலைகளாக இருந்தாலும் வினை வேலைகளை உயிருக்குத்தீங்கு வந்தாலும் துணிந்து தங்கள் சொந்தவேலைகளாகச்செய்து வந்தார்கள் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே.

பண்ணையாட்களுக்கு முக்கியமானது சாகுபடிவேலை. அதில் முக்கியமாய் மெய்க்காட்டு வேலைகள். பண்ணையாட்கள், முதல்நாள் இராத்திரியிலேயே மறுதினத்தின் வேலையைத் தெரிந்து

கொண்டு, வேலையின் சௌகரியத்தையும், அவசரத்தையும் அறிந்து, தங்கள் சொந்தவேலையாக நினைத்து. ஆட்களை அதிகாரிகள் கூப்பிடுமுன் வேலைத்தலைக்கு வந்து வேலைபார்க்கவேண்டும்.

இவர்கள் உழவுகாலங்களில் மாட்டுக்காரர்களுடன் சேர்ந்து மாடுகளுக்குத் தண்ணீர்காட்டி, வயலுக்கு ஓட்டிக்கொண்டு போகவும், கூலி ஆள், பள்ளத்திகளை அழைத்துவரவும் நேரிடுகிறபடியால், இராப்பகலாய் வேலைகளைக் கவனித்துச் செய்யவேண்டும். கூலிஆள், பள்ளத்திகள், ஜாஸ்தியாக வேலைசெய்யும்போது கூலிஆள், பள்ளத்திகள், அவர்களுக்கு முந்தி வேலைக்கு வந்து அவர்களுக்குத் தவக்கப்படாமல் வேலைநெரசித்து, அவர்களைப்பூராவும் வேலை வாங்கி, தங்கள் உதவியினாலும், தைரியத்தினாலும், அவர்களைக் களைக்காமல் வேலைசெய்யும்படி செய்யவேண்டும்.

மகசூல், அறுவடைகாலங்களில் பண்ணையாட்கள், பள்ளத்திகள் திருடுதல் வழக்கமாயிருக்கிறபடியால், அதற்கிடங்கொடுக்காமல், வேண்டியவைகளை நேரில் கேட்கவும், கொடுக்கவுமான வழக்கங்களைக் கிராமாதிகாரிகள் தங்கள் சாமர்த்தியத்தினாலாவது அதிகாரத்தினாலாவது; நாளடைவில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.

காவற்காரன் முதலியவர்கள் அஜாக்கிரதையினாலாவது, அகம்பாவத்தினாலாவது சரியானபடி வேலை செய்யாத பக்ஷத்தில், பண்ணையாட்களில் ஒருவன் சில்லரைவேலைகளையும், காவல், களம் முதலியவைகளையும் சேதமில்லாமல் பார்த்து, மற்றவர்கள் சௌகரியப்படி எல்லாரும் ஒற்றுமையாய் வேலைசெய்து அதன் வருமானங்களைப்பெற்றுக் கொள்ளவேண்டும்.



எஜமானருடைய கௌரவத்திற்காவது முக்கியகாரணங்களாலாவது வேறு விதமான நிர்ப்பந்தங்களினாலாவது, சொந்தகிராமங்களிலோ இதரஇடங்களிலோ பண்ணையாட்கள் போகநேர்ந்தால், எஜமானருடைய லாபநஷ்டங்களையும் கௌரவத்தையும், கீர்த்தியையும் கவனித்து நம்பிக்கையுடனும், தைரியத்துடனும், போய் எஜமானருடைய அபிப்பிராயப்படி நடக்கவேண்டும் அந்தக்காலங்களில் பண்ணையாட்களுடைய லாபநஷ்டம்செலவுமுதலியவைகளை எஜமானரும் சம்பந்தப்பட்டகாரியஸ்தர்களும் செய்யவேண்டியது. பெருத்த கிராமங்களில் இப்படிப்பட்ட காரியங்கள் அவசியம் உண்டாகுமானபடியால் அதற்குத் தகுதியான ஆட்களை கிராம அதிகாரிகள் சேகரிக்கவேண்டும்.

பண்ணையாட்கள் அடிக்கடி வீட்டிலிருக்கக்கூடாது; அவசியமான காரியங்களையும், வேலையின் சௌகரியங்களையும், முன்னாடித் தெரிந்துகொண்டு அதை அநுசரித்து வேலை பார்க்கவேண்டும். பெரிய கிராமங்களில் பண்ணையாட்களுக்கு வருஷம் பூராவும்சதாவேலைகள் இருந்துகொண்டேயிருக்குமானபடியால் கிராம வேலைகள் தீர்ந்தபிற்குதான் இதரவேலைகளுக்குப் பண்ணையாட்கள் போகவேண்டும்.

ஆட்கள் கார்பார், காரியஸ்தர்கள், உத்திரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதுடன், கிராமக் கணக்குப்பிள்ளையினுடைய வருத்திக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

8. மாட்டுக்காரன்;- இவன் உழவுமாடுகளுடன் காளை, மறுப்பு, மாடுகளையும், கன்றுகளையும், இளைக்காமலும், சீக்கு முதலி

யவைகள் அணுகாமலும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மாடுகளுக்குத் தகுந்த மாட்டுக்காரனை நியமிக்கவேண்டும், காலத்தில் மேய்க்கவும், அடிக்கடி குளிப்பாட்டவும், கூடைத்தீனி வைக்கவும், இராக்காலங்களில் விழித்து கைக்கோல் போடவும், உழவுகாலங்களில் உழவும், போகவேண்டும்.

துஷ்டமாடுகளைத் தனிமையில் கட்டவேண்டும். பண்ணை மாடுகள் கிராமப்பயிர்களில் பட்டிமேய்ந்து பவுண்டுகளில் அடைபட்டால் இவர்கள் சம்பளத்தில் அந்தச்செலவை பிடிக்கப்படுமாகையால் இவர்கள் அந்தப்படிமாடுகள் பட்டிமேயாமல் கவனிக்கவேண்டும்.

மாட்டுக்காரர்கள், கார்பார், காரியஸ்தர்கள் முதலானவர்களுக்குப் படிப்படியே கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். சௌகரியம்போல், முறைபோட்டாவது, சேர்ந்தாவது மாட்டுக்கொட்டிலில் படுக்கவேண்டும்.

## மூன்றாவது பிரிவு

## 1 வது அத்தியாயம்

## குத்தகைதாரர்களும் அவர்கள் நடவடிக்கைகளும்.

1 மொத்தக்குத்தகை தாரர்கள் (Lessees):—இவர்கள் உண்மையில் தகுந்த பெரிய மனிதர்களாகவும் ஏராளமான சொந்த நிலங்களையுடையவர்களாகவும் இருந்தும் அதிகலாபத்தைக் கருதியோ, கௌரவத்திற்காகவோ தம்மோடிருப்பவர்கள் நிர்ப்பந்த



த்துக்குட்பட்டோ கண்ட்ராக்ட் முதலிய வேலைகளிலும்மொத்தக்குத்தகைகளிலும் பிரவேசிக்கிறார்கள். தங்கள் சிநேகிதர்கள், பந்துக்கள், காரியஸ்தர் முதலான வேலைக்காரர்கள், இவர்களில்யாராவது அவரவர்களுடைய சொந்தப்பிரயோஜனத்தை முன்னிட்டோ, வேறுகாரணங்களாலோ முயற்சித்து கிராமங்களை மொத்தமாகக்குத்தகைக்குவிட்டு அனுபவிக்கிற பிராசுதார்களைக்கலந்து குத்தகைரேட்டு, கெடு, மற்றும் இதர சௌகரியங்கள் முதலியவைகளைக் கேட்டுத்தீர்மானித்துக்குத்தகையை முடிக்கிறார்கள். அப்படி முடிக்கிற வரையில் குத்தகைக்கு விடுபவரும் வாங்குபவரும் ஒருவருக்கொருவர் நேரில் சந்திக்கச் சௌகரியப்படுகிறதில்லை. தஸ்தாவேஜு முடிந்து ரிஜிஸ்டர் ஆனபிறகுதான் ஒருவருக்கொருவர் நேரில் வரவும் சௌகரியங்களைப் பேசவும் ஏற்படுகிறது.

அப்படி ஒப்புக்கொள்ளுகிற குத்தகைதாரர்கள் ஒப்புக்கொள்ளும் கிராமங்களின் வரவு செலவைக்கவனித்து அவைகளில் சில இடங்களை தாம்வாங்கின குத்தகைரேட்டுக்குமேல் 100க்கு 25க்குக் குறையாமல் அதிகப்படுத்தி உட்குத்தகைக்கு விடும்படிக்கும் பாக்கிநிலங்களை சொந்தத்தில் சாகுபடி செய்யும்படிக்கும் ஏற்பாடுசெய்து, அந்தக்கிராமங்களில் உள்ள காரியஸ்தர் முதலானவர்களுடன் தம்முடைய சொந்தமனுஷியாளையும் நியமிக்கிறார்கள்.

அவ்விதம் நியமிக்கப்பட்டவர்கள், தங்கள் சொந்தசாமர்த்தியத்தினால் உட்குத்தகைக்கு வாங்கக்கூடியவர்களை வரவழைத்து போட்டியாகக்கேட்கும்படி செய்து தங்கள் உத்தேசத்திற்கு

குறையாமல் உட்குத்தகைக்கு விட்டு தஸ்தாவேஜுகள் முடித்து ஜாப்தா தயார்செய்து அனுப்புகிறார்கள்.

பாக்கிநிலங்களை பண்ணையில்வைத்து நிலச்சுவான்தாரிடம் வாங்கியிருக்கிறவிரை, தசு கூலி முதலியவைகளைவைத்துக்கொண்டு மேற்றும் வேண்டிய செலவுகளுக்கு குத்தகைதாரிடம் செலவுக்கு விவரஜாப்தா அனுப்பி அவர்சொந்த ஐவேஜியிலிருந்து வாங்கிக்கொள்ளுகிறார்கள்.

இவைகள் எல்லாம் முடிவதற்குக்காலதாமதப்பட்டுப் புதுஜலம்வந்துவிடுகிறபடியால், மராமத்து, வாய்க்கால்வெட்டு, எரு, தழை, கிடை முதலிய செய்நேர்த்திகளுக்கு இடமில்லாமல் போகிறது. உடனே அவசரப்பட்டு இவர்கள் விளைவிடுதல், நடுதல்முதலிய சாகுபடி வேலைகளை ஆரம்பிக்கிறார்கள்.

ஷெ கிராமங்களில் நெடுநாளாய்ப்பிழைத்துக் கொண்டிருந்த பூர்வக்குடிகள், சுவான்தாரிடத்தில் தாக்ஷிண்ணியத்தினாலாவது செவ்வையாகவிளைந்தகாலத்தில் நன்றாய்ச்சாப்பிடலாம் என்றாவது நினைத்து, வேலைக்காலங்களில் சுவான்தாரர் அழைத்தவுடன் வந்து கூலிகளை வழக்கம்போல் பெற்று, பயத்துடன் வேலைசெய்வார்கள். ஆனால் குத்தகை தாரரிடத்தில் அவ்விதம் இவர்கள் கட்டுப்பட்டுநடத்தல்கஷ்டம்.

காய்ச்சற்காலங்களில்முதலில் வாய்க்கால்களை கோடை வெட்டு வெட்டாததால் இரட்டிப்புச்செலவழித்து வெட்டிஜலம்பாய்ச்ச நேரிடுகிறது.





மகசூல்தயாரானவுடன் பண்ணைக்கண்டுமுதலை அதிகக்கடுமையாய் கஷ்டப்பட்டுக்கண்டுமுதல் செய்துமுடித்து உட்குத்தகைப்பேர்வழிகளிடம் வசூலிக்க ஆரம்பிக்கிறார்கள். உட்குத்தகைதாரர்கள் அவர்களுடைமை சண்டைவழக்குப்போல குத்தகையில் சிலபாகம் அளக்கிறார்கள்,

உடனேமொத்தக்குத்தகைதாரர்கள் காணாடையில் உள்குத்தகைதாரர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும் குத்தகையில்லாமல் பிழைப்புக்கெட்டவர்களின் புகார்களையும் கேட்டு சல்லிசாக வரும்வரையில்வாங்குவோம் என்றுமனதால் எண்ணி, அளக்கிறவரையில் வாங்குங்கள்என்று தங்களுடையகாரியஸ்தர்களுக்கு உத்தரவுசெய்கிறார்கள். காரியஸ்தர்கள் முடிவில் கணக்குப்பார்க்க, கிரமமாக செலவழியக் கூடியவைக்காட்டிலும் இரட்டிப்புச்செலவு ஏற்பட்டு மொத்தக்குத்தகைதாரர் தங்கள் சொந்தஐவேஜியிலிருந்து கொடுத்ததொகைகளும் செலவழிந்து போனதுமன்றி சுவான்தாருக்கு அளக்க வேண்டியகுத்தகை நெல்லிலும் பாக்கிஏற்பட்டுவிடுகிறது.

மொத்தகுத்தகைதாரர் காரியஸ்தர்களைக் கணக்குக்கேட்டு நஷ்டமுண்டானதைத் தெரிந்து வருத்தப்பட்டுக்கொண்டு, இவ்வளவு நஷ்டம் உண்டாகக்காரணமென்னவென்று கேட்டால்; அதற்கு காரியஸ்தர்கள் காலப்பிற்பாட்டில் குத்தகை ஒப்புக்கொண்டதாலும், பழக்கமில்லாத கிராமங்களானபடியால் முதலில் அனுபோகந்தெரியாததாலும், இந்த நஷ்டம் உண்டாகியிருக்கிறது என்று சால்ஜாப்புசெய்கிறார்கள். மறுபடியும் உட்குத்தகைதாரர்களிடம் பாக்கியிருப்பதை வசூலிக்கத் அடுத்தவருஷம் கிரம

ப்பட்டால் சரிசெய்யலாம் என்றும் சாமர்த்தியமாகப்பேசி மொத்தக்குத்தகைதாரரைச் சமாதானம் செய்கிறார்கள்.

கொஞ்சகாலம் கழித்துக் காரியஸ்தர்கள் மறுபசலிச்சாகுபடிக்குச் சிலவு கணக்குத்தயாரித்து மொத்தக் குத்தகைதாரரிடம் சமயம்பார்த்து தொகை கேட்கவும், கிரயப்பட்டுக்கொண்டோ, குத்தகையைவிட அவமானப்பட்டோ, கொடுக்கிறார்கள். ஒரு சமயம் தன் சொந்தக்குடிகளைக் கொண்டு நேரில பார்ப்போமென்று தைரியஞ்செய்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பார்த்தால், ஊர்விட்டு ஊர்வருவதில் செலவு ஜாஸ்தியும் வேலைக்குறைவுமேதவிர வேறில்லை. அதனால் நஷ்டமுண்டாகுமென்ற பயத்தினாலும், பிரயாசையினாலும், காலத்தில் பயிரிட்டு மறுபசலியைச் சுமாராக ஒப்பேற்றுகிறார்கள். ஆனால் முடிவில் ஒப்புக்கொண்ட குத்தகைக்குக்கட்டாதென்பது நிச்சயம்.

உட்குத்தகைதாரரிடம் வசூலிக்கலாமென்றாலோ சலிசாக வருகிறதில்லை. பிராதுசெய்தால், அதிகக்குத்தகை யென்றும் வாரங்கொடுப்பதாகப் பேச்சு என்றும், கிட்ட இருந்து கண்டுமுதல் செய்து எடுத்துக்கொண்டுபோய்விட்டார்கள் என்றும், அதிகளவு போட்டிருக்கிறார்கள் என்றும் அநேகவிதமான எதிர்க்கக்ஷிகளைச் சொல்வதால் நியாயாதிபதி நியாயத்தை அனுசரித்துப் பூராவோ, கொஞ்சமோ தீர்ப்புச்செய்கிறார். அவ்விதம் தீர்ப்பு பெற்றதை வசூலிப்பதற்கு வேறுசெலவு செய்யவேண்டியதாயிருக்கிறது. சும்மா இருக்கவிடவும் முடிகிறதில்லை. குடிகளின் விரோதத்தையும், தமக்குள்ள நஷ்டத்தையும் உத்தேசித்து வசூலாகுமளவில் போகட்டுமென்றுபார்த்தால் சிலர் பாப்பராகலால்



ஒன்றும் கிடைக்காமலும், சிலரிடத்தில் சொற்பத்தொகை வசூலாகியும், செலவுசெய்த தொகைக்கோ ஈடாகாமல் நஷ்டமுண்டாகிறது.

கடைசியில் சுவான்தாரரும், மொத்தக் குத்தகைதாரரும், தனித்தனி வரவு செலவுக்கணக்குகளைக் கவனிக்க இருவருக்கும் அதிகநஷ்டம் உண்டாவதால், இதன்மூலமாய் ஒருவருக்கொருவர் மனஸ்தாபமுண்டாகி வீண் செலவுகள் நேரிடாமல் செய்ய வேண்டுமென்று நினைத்து, கணக்குத்தீர்த்து, குத்தகையை ரத்து செய்ய நினைக்கிறார்கள். அப்படியே கணக்குகளைப்பார்த்துச் சரியான மத்தியஸ்தர்களின் உதவியினால் (ஏற்பட்ட நஷ்டத்தைக் கவனிக்காமல்) ஒருவருக்கும் நஷ்டமின்றிச் சிநேகத்தை அபேக்ஷித்து கிரமமாகப்பைசல் செய்துகொள்ளுகிறார்கள்.

இப்படியின்றிச் சில சுவான்தாரரும், மொத்தக்குத்தகைதாரரும், அவரவர்களிடம் சேர்ந்திருக்கும் துர்மந்திரிகள் சகவாசத்தினால் சுவான்தாரராயுள்ளவர், குத்தகை தஸ்தாவேஜி இருக்கும்போது நாம் நஷ்டப்படமுடியாதென்றும், மொத்தக்குத்தகைதாரர், தஸ்தாவேஜி எழுதிக்கொடுத்திருந்தால்; சொந்த ஜீவனத்திலிருந்து விரை, தசுவி போட்டு நஷ்டமடைந்ததுமின்றிப்பாக்கியும் கையிலிருந்து கொடுக்கமுடியுமா என்றும், கக்ஷிகள் பேசி, வீம்புபாராட்டிப் பணக்கொழுப்பினால் மூன்று கோர்ட்டு வரையில் போகிறார்கள்.

ஆகையால், இப்படியின்றி ஒழுங்காக இருவருக்கும் இலாபமுண்டாகும்படி செய்துகொள்ள வேண்டுமானால்; சரியான குத்தகைகளை நிக்க கெடுபோட்டுக்கொடுத்து, வேண்டிய

விநாதககூலிகள் கொடுத்து, தம் சொந்தமனுஷியாளைக்கொண்டு அடிக்கடி கவனிக்கச்செய்து, இதர உதவிமுதலியவை செய்து, களைபிடுமுதல் காலங்களில் கூடஇருந்து, தங்களுக்குச் சேரவேண்டியதைப் பற்றிக்கொண்டுவரவேண்டும்.

மொத்தக்குத்தகைகாரரும், தாமே நிலத்தின் சுவான்தாரரென்று நினைத்து, அடிக்கடி நேரில்பார்த்துச் சீர்திருத்தி, தகுந்த அசாமிகளின் உதவியால் பாடுபட்டால், சுவான்தாரருக்கு அளந்ததுபோக தனக்கு அதிகலாபங்கிடைக்கத் தடையில்லை. ஒருசமயம் லாபமில்லைவிட்டாலும் நஷ்டமுண்டாக ஏதுவேயில்லை. தமக்குள் 10-ஜனங்களுக்குப்பிழைப்பும் அதனால் நன்மதிப்பும் பெறலாம்.

2 — குத்தகைதாரர்:—இவர் சில பாகத்தை குத்தகைக்கு ஒப்புக்கொள்பவர். சுவல்பமுதலை வைத்துக்கொண்டு, அதிக பணத்தாசையினாலோ, தம்மைப்பெரியமனுஷன் என்று பிறர் மதிக்கவோ, வேறெனக்கக்காரணத்தினாலோ, பெரியமனுஷியாளைப்போற்காட்டிக்கொண்டு, சில பிராசுதாரர்களின் சிநேகத்தினாலாவது, வேறு பெயரினாலாவது, மத்தியஸ்தர்கள் மூலமாயாவது, தம்முடைய அளவுக்கு மீறிக், குத்தகைக்கு வாங்கி தன் தாவேஜி எழுதிப் பூர்த்திசெய்துகொள்ளுகிறார்கள்.

ஒப்புக்கொள்ளுமுன் நேரில்கவனித்துச் சிரமப்படவேண்டுமென்று நினைத்திருந்தாலும், இவர்கள் காலத்தை அனுசரித்து கொள்வதை உத்தேசித்து, ஏஜெண்டு நியமித்துத் தாம் வெளி வியாபாரத்தில் பிரவேசிக்கிறார்கள். இவரும் மேற்சொன்ன மொத்தக்குத்தகைதாரரைப் போலத்தொழுதல் போட்டுச்சாகுபடி செய்ய



வேண்டியவர்தான். ஆனால் கடைசியில் குத்தகை பாக்கி அதிகப்பட்டு நஷ்டத்திற்காளாவது உண்மை என்பதாக மேல்கண்ட விபரப்படி தெரிந்துகொள்ளலாம்.

மிராசுதாரர்களை இவருடைய டம்பத்தைக்கண்டு எப்படியிருந்தபோதிலும் பெரியமனுஷியன் குத்தகையை விடமாட்டார் நமக்குவரும்படிக்கு குறைவில்லை, மேலேதவக்கப்பட்டால்எப்படியாவது முடித்துக்கொள்ளுவாரென்று நினைக்கிறார்கள். உட்குத்தகைதாரர்களுக்கென்ன நஷ்டமுண்டானாலும் உழுதவர்களைக் கெடுக்கமாட்டாரென்றநம்பிக்கையோடிருந்தாலும் கண்டகெல்லே அளந்துவிட்டால் பிறகு ஒருசமயம் நிலங்கொடுக்கமாட்டார், தாம்செலவுசெய்து சாகுபடிசெய்து நஷ்டமடைய ஏதுவாகுமென்று, தாங்கள் செலவு செய்தவைகளையும் தங்களுக்குக் கிடைக்கக்கூடியவைகளையும் எடுத்துக்கொண்டு மீதியை அளந்துவருகிறார்கள். குத்தகைதாரருடைய நடவடிக்கைகளைக்கொஞ்சம் நெருங்கிப்பழகிய வருடைய ஏஜெண்டு, காரியஸ்தர். முதலியவர்கள் முதலாளிக்கு அதிகநஷ்டம் உண்டானால் தங்களுக்குச் சம்பளம் கிடைக்கமாட்டாதென்றும், தங்களுக்குள்ள சம்பளங்களை முந்தி பற்றிக்கொள்ள எண்ணி எடுத்துக்கொள்ளுகிறார். இவர்சாகுபடி முதலிய சொந்தச்செலவுகளுக்கு வாங்கியிருக்கிற கடன்காரர்கள் தாக்ஷிண்யமன்னியில் சகஜமாகவோ கோர்ட்மூலமாகவோ வசூலித்து வருவதாலும், இவருடைய குடும்பச்செலவுகளும் இதைக்கொண்டு தான் நடத்தவேண்டியிருப்பதாலும், சுவான்தாரருக்கு அளக்கவேண்டிய குத்தகையில் அதிகப்பாக்கி உண்டாவதால் பலவிதமான நஷ்டங்களை அடைகிறார்.

இவனுடைய அனுபோகத்தினாலும் குத்தகைபாக்கியினாலும், முதல்வருஷத்திலேயே சுவான்தாருக்கு அதிருப்தியுண்டாகும். ஆனால் தஸ்தாவேஜு எழுதிக் கொடுத்துக் கட்டுப்பட்டிருப்பதைக் கொண்டும், இன்னம் ஒருவருஷம் பார்க்கவேண்டியது நியாயமென்றும், சுவான்தார் எண்ணுவதால் மறு வருஷமும் குத்தகைதாரர் அனுபவிக்கிறார். அதிலும் நஷ்டமடைந்து இரண்டு வருஷபாக்கியும் சேர்த்துக் கணக்குப் பார்க்கும்போது அதிகப்பாக்கிப்பட்டுக் குத்தகைதார் சல்லிசாகவோ கோர்ட்டு மூலமாகவோ நிலத்தைச் சுவான்தார் வசம் விட்டுவிட்டு, பாக்கி கொடுக்கச்சிரமப்பட்டுச் சுவான்தாருடையவும் அவர் காரியஸ்தர் முதலியவர்களுடையவும் தயவை எதிர்பார்த்து நஷ்டம் அடைவதுடன் சிலசமயம் அவமானமும் அடைகிறார்.

ஆகையால் சுவான்தார் நேரில் சிரமப்படக்கூடியவர் என்பதையும், சாகுபடிக்குச்செலவு செய்யக்கூடிய ஐவேஜியும், கால்நடைகளும், ஆள்களும் உடையவர் என்பதையும் தெரிந்துகொண்டு மராமத்து செய்து ஏரு முதலியவைகள் போட்டுப் பண்படுத்த முடியுமாவென்று கவனித்துக்கொண்டு, உட்குத்தகைவிடாமல் கண்டித்துக்கொண்டு குத்தகைக்குவிடவேண்டும்.

குத்தகைதாரரும் நேரில் ஒவ்வொன்றையும் கவனித்துச் செலவை நிதானமாய்ச்செய்துகுத்தகைக்கு அளந்தபிறகு பாக்கியை அடையவேண்டும்.

நிலமிராசுதாரர்களும் அவர்கள் ஏஜெண்டுகளும், தகுந்த பேர்வழிகளிடம் குத்தகைக்குக் கொடுத்திருப்பதால் எப்படியும் வசூலித்துவிடலாம் என்று எண்ணிக்குத்தகை நிலங்களையும்,





அவற்றின் சாகுபடிகளையும் லாபநஷ்டங்களையும் ஒருநாளும் கவனிக்கிறதில்லை. அவ்விதம் கவனிக்காமலிருப்பது நிரம்பவும் பிசகு. குத்தகைத்தாரர்களுக்கு வறட்சேத, வெள்ளச் சேதங்களினால் முதல் வருஷத்தில் நஷ்டமுண்டாகியிருப்பதை மறு வருஷத்தில் ஈடு செய்யமுடியும், முடியாதென்று தாங்கள் தெரிந்திருந்தும், தஸ்தாவேஜியின் பலத்தினால் தண்டப்படுத்திவாங்குவதுகொஞ்சமும் நியாயமாகமாட்டாது.

3—சில்லரைக்குத்தகைதாரர்கள்:—இவர்களில் 100-க்கு 75 பேர் மிகுந்த ஏழைகளாகவும் உழுது ஜீவனம் செய்வதே தொழிலாகவுடையவர்களாயும் இருப்பார்கள். இவர்களில், நம்மைத்தவிர கதியில்லையென்றிருப்பவர்களுக்கும், நம்முடைய மனைகளில் குடியிருப்பவர்களுக்கும், யோக்கியமுள்ளவர்களாயும், பயந்தவர்களாயுள்ளவர்களுக்கும் முதலில் நிலம் கொடுக்கவேண்டும்.

ஒருவருக்கும் நஷ்டமுண்டாகாமல் குத்தகைக்குக் கொடுக்கவேண்டும். சில வருஷங்கள் ஒருவனே உழுது சல்லிசாக நடத்துவந்தால், காலத்தை அனுசரித்து ஒருசமயம் வேறொருவன் அதிகக்குத்தகைக்குக் கேட்டு அந்தப்படி முதல்வனும்கொடுக்கதயாராகயிருந்தால்முதல்வனைவிட்டுமாற்றிக்கொடுக்கக்கூடாது.

சில்லரைக் குத்தகைதாரர்களுக்கு, அவசியத்திற்குத் தக்கபடி விதை, தககூலி முதலியவைகளை முதலில்கொடுத்து, ஏருவடி முதலியவைகளுக்கு உதவி செய்து மராமத்து, வாய்க்கால் வெட்டு முதலியவைகளைச்செய்து கொடுக்கவேண்டும். சாகுபடி காலத்தில், அக்கம்பக்கத்திற்குக் குறைவில்லாமலிருக்கிறதா வென்று, ஹெட்காரியஸ்தர் பார்க்கவேண்டும். மகசூல் தயாரானவு

டன், ஆசாமிகளின் நம்பிக்கை, யோக்கியதை முதலியவைகளை அனுசரித்து, முன்னால் சொல்லியிருக்கிறபடி புள்ளியில் குத்தகைக்குக்காணும் போலிருந்தாலும், கூட இருந்து வரவேண்டிய குத்தகையுடன், அவர்கள் வாங்கியிருக்கிற கடன், முதலியவைகளையும், காலத்தையும், சௌகரியத்தையும், அனுசரித்து வசூலிக்க வேண்டும். கானுக்காலங்களில், மேலாவின் உத்திரவை அனுசரித்து, மேல்மனுஷாளைக் கூட்டிவைத்துக்கொண்டு, ஒருவருக்கும் நஷ்டமுண்டாகாமல், சௌகரியப்படி கணக்குத்தீர்த்து வசூலிக்க வேண்டும். குத்தகைக்கணக்குத் தீர்வதற்குமுன், களங்களிலிருக்கும் கண்டுமுதல் நெல்லை சில்லரைக் குத்தகைதாரர்கள் எந்தக்காரணத்தைக்கொண்டும் கொண்டு போகாமலிருக்கும்படி செய்யவேண்டியது, ஹெட்காரியஸ்தர் பொறுப்பு. கோர்ட்டுகளுக்கு போகும்படி விடக்கூடாது. பயந்து நடக்கவேண்டியதற்காகவும் ஒழுங்காய் இருக்கவேண்டியதற்காகவும், அவசியமானால் ஒன்று இரண்டு பிராதுகளைத் தயார்செய்து தகுந்த வக்கீல்களைக் கொண்டு நடத்தித் தீர்ப்புப் பெறவேண்டும். இவைகளுக்கு முதலிலேயே மேலான அதிகாரிகளின் உத்திரவு பெற்றுக்கொள்ள வேண்டும்.

வீம்பினாலாவது ஒருவருக்கொருவர் விரோதத்தினாலாவது காரியஸ்தர்களின் கெட்ட எண்ணங்களினாலாவது கொஞ்சம் சிரமப்பட்டு வசூல் செய்யாத சுவல்ப பாக்கிகளையும் தள்ளிக் கொடுத்தவைகளையும் தள்ளிக் கொடுக்க வேண்டியவைகளையும் பகுதி வகையறா பாக்கிகளையும் பிராது செய்து கோர்ட்டுக்குப்போகத் துணிந்தால் விவகாரம் தெரியாதவர்கள் கூட, விவகாரம் கற்றுக்கொண்டு மரியாதை கெட்டு பல விதமான



கஷ்டங்கள் சொல்லி வழக்காடிக் கடைசியில் நாம் ஜெயித்தாலும், வசூலிக்க மார்க்கமில்லாமற் போவது சில. நேரிலாவது பேர்சினாலாவது நயந்து கேட்டுக் கொள்ளுகளினால் பூராவுமோ, சில தொகைகளோ தள்ளிக்கொடுப்பது சில. வேறு வழியில்லாததால் வீம்புக்காக வாரண்டிற் பிடித்து அவர்களுக்குச் சோறுபோடுவது சில. இப்படிச் செய்தால் சொற்ப பாக்கிக்காக அக்கிரமமாய் வாங்கினார்கள் என்றும், சொந்தக் குடிகளைக் கூட, வாரண்டிற் பிடித்து வைத்தார்கள் என்றும், கெட்ட பெயர் வாங்கியதும் விவகாரத்தினால் வீண் செலவு செய்ததும்தான் மிச்சம், தவிர காரியஸ்தர்களுடையகவனக் குறைவினாலாவது, வேறுகாரணங்களினாலாவது, காலாவதியாயும் போகிறதுண்டு. ஆகையால்இவ்விதமான பலநஷ்டங்கள் உண்டாகாமல் மிராசுதாரர்களும், ஏஜெண்டுமுதலியவர்களும், கவனித்து ஒழுங்காய் நடத்தவேண்டும்.

## ௨. வது அத்தியாயம்.

## புன்செய்பகுதி (தோப்புமனைஉள்பட)

1—புன்செய்ப்பகுதி:—புன்செய்யைப் பகுதிக்கு விட்டால் பின் ஒருபைசா கூடத்தள்ளாமல் வாங்கவேண்டும். 1, 2, 3-கெடுக்களிலோ, அட்வான்ஸ் வாங்கியோ, கிராமவழக்கப்படிப் பகுதிக்குவிட்டு வசூலிக்கவேண்டும். படுகைப்புன்செய்களும், சாதாரணப்புன்செய்களும், செய்நேர்த்தி செய்வதற்குத் தகுந்த பலன்தான் கொடுக்கும். ஆகையால், அதற்குத்தகுந்த பேர்வழிகளிடம் கொடுக்கவேண்டிய பொறுப்பு, காரியஸ்தருடையது. அடிக்கடி புன்செய்களை மாற்றிக்கொடுக்கக்கூடாது. ஆனால் கிராமவழக்கப்படி பகுதிகளை அதிகப்படுத்தலாம் துவரை, மொச்சை, உளுந்து

எள்ளு முதலிய புன்செய்த் தான்யங்கள் விதைத்திருப்பவர்கள், மிராசுதாரர்களும், கிராமாதிகாரிகளும் கேட்டால் பகுதிக்குள்ள கிரயம் போட்டுக்கொடுக்கவேண்டும்.

ஒப்புக் கொண்டிருப்பவர்கள் பாபாரகவும், அழுத்தமான பேர்வழிகளாயும், இருந்தால், மகசூலை மதித்துப் பகுதிப்பணம் வாங்கிக்கொண்டுதான் மகசூலை விடவேண்டும்.

2—தோப்புப்பகுதி:—தென்னந்தோப்புகளைச் சருவடக்குத் தகையாகவிட்டு, கூடியவரையில் அட்வான்ஸ் பெறவேண்டியது. சௌகரியப்படாவிட்டால், குத்தகைக்கெடுவுக்கு முன் பகுதித் தொகைக்குக் கெடு விருக்கவேண்டும். எந்தக்காரணத்தைக்கொண்டும், தள்ளிக்கொடுக்கக்கூடாது. கிராமவழக்கப்படி, மிராசுதாரர்களுக்குக் கொடுக்கவேண்டிய தேங்காய் முதலிய இதரபாத்தைகளையும் கண்டு தஸ்தாவேஜி முடிக்கவேண்டும்.

தென்னைமரங்களைக் கள்ளுக்கட்டக்கொடுக்க விரும்பினால், காய்ப்பிற்குவராதஇள மரங்களையும், தலைமாறக்கூடியமரங்களையும், கொழுமையினால் காய்க்காதமரங்களையும், ஒருதடவை அல்லது இரண்டுதடவை கள்ளுக்கட்ட விடலாம். ஒருதென்னந்தோப்பில் 100-மரங்களிருந்தால் உத்தேசம் 80 மரங்கள்வரையில் கள்ளுக்கட்ட உபயோகப்படும். அவைகளைச் சராசரி குறைந்தபக்ஷம் மரம் ஒன்றுக்கு ரூ 4-வீதமாக 6-மாதத்திற்கு பாதியும் மறு ஆறுமாதத்திற்குப் பாதியுமாகக் கொடுத்தால் வருஷம் 1-க்கு ரூ 320 கிடைக்கும். இவ்விதம் 5-6 வருஷங்கள்மாறிமாறிக் கள்ளுக்கட்டக் கொடுத்தால், தென்னைமரக்கிரயம் புன்செய்க்கிர



யம் இவைகளுக்கு இரட்டிப்புக்கிடைக்கும். அதற்குமேல் மரம் கெட்டுப்போனாலும் கொல்லை இலாபம் என்று சிலர்நினைக்கிறார்கள். அவ்விதம் பணத்தைப் பெரிதாக நினைத்துச் சாசுவதபலன்கொடுக்கக்கூடிய கற்பக விருக்ஷம்போன்ற தென்னந்தோப்பை அடிக்கடி கெடுப்பதால் பாவச் செயலுக்குப் பாத்திரப்படுவதுடன்கள் விலைத்தொகையால் விருத்தியாகிறதில்லை.

3 மனைப்பகுதி;- மிராசுதாரர்களுக்குச்சுவபோக சொந்தமான கிராமங்களில் அக்கிரகாரம், சூத்திரத்தெரு, பள்ளத்தெரு, பறத்தெரு, முதலியன ஜாரி மனைக் கட்டடங்களாயும், தீர்வை புன்செயில் காலிமனைகட்டடங்களாகவும் இருக்கின்றன. அவைகளில் சிலவிடங்களில் சாசுவதமாய்க் கட்டிடங்கள் கட்டிக்கொள்ளுப்படி கொடுத்துப் பகுதிமாத்திரம் வாங்கிவருகிறார்கள். சிலவிடங்களில் மிராசுதாரர்களே கட்டிடங்கட்டி வாடகைக்கு விட்டு வசூலிக்கிறார்கள். சிலவிடங்களில், குடியிருப்பவர்கள் கட்டிடங்கட்டிக்கொண்டு இத்தனைவருஷ கெடுவரையில் வருஷம் ஒன்றுக்கு பகுதி இவ்வளவென்று தீர்மானித்து கெடுக்கடந்தவுடன் சுவான்தார் காலிசெய்யும்படி சொன்னால் மேல்கட்டிடத்தைப்பிரித்துக்கொண்டு காலிசெய்து விடுகிறதென்றும் அல்லது மேல்கட்டிடத்தை மதிப்பிட்டுக் கிரயத்தை சுவான்தார் கொடுத்தால் அப்படியே விட்டுவிடுகிறதென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சிலவிடங்களில் பகுதிக்குப்பதிலாக வீட்டிற்குச்சேருகிற எருக்களைச் சுவான்தார் அள்ளிக்கொள்ளுகிறது வழக்கமாயிருக்கிறது.

புதிதாய் ஏற்படக்கூடிய காரியங்களுக்கு, காலத்தையும் விவகார சட்டங்களையும், அனுசரித்துக், தகுந்த தஸ்தாவேஜி

கனை, முன்ஜாக்கிரதையுடன் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம்.

மேற்கண்ட மனைக்கட்டடமுதலியவைகளின்பகுதிவகையறாக்களை வகுப்பதோ, கட்டடங்களிலிருந்து அப்புறப்படுத்தி வசப்படுத்தலோ, கட்டடங்களைக் காலிசெய்து வசப்படுத்தலோ, மற்றும் பலவிஷயங்களையும், சகஜமாகவாவது, கோர்ட்டு மூலமாகவாவது சமயம் போல் செய்துகொள்ளவேண்டியது.

இவைகளில் (சாகுவடிப்பகுதிகளில்) மற்ற இடங்களில் இருக்கிற தென்னை, மா, பலா, புளி, மூங்கில் முதலிய பலவிருக்ஷங்களும், விறகுக்கு உபயோகப்படக்கூடிய விருக்ஷங்களும், மிராசுதாரர்களுக்குச் சொந்தமானதால், அவைகளில் குத்தகைக்குவிடக்கூடியவைகளையும், வெட்டி எடுத்துக்கொள்ள வேண்டியவைகளையும் வருஷத்தையும் பாத்தியதைகளையும் இழந்துபோகாமல் அனுசரித்து நடத்தி வரவேண்டும்.

## வாரசாகுபடி.

வாரசாகுபடி:—சிலகிராமங்கள் நன்செய்யாயிருந்தாலும் புன்செய்யாயிருந்தாலும், வாரசாகுபடிக்கு விடுவதுவழக்கமாயிருக்கிறது.

அப்படி விடப்பட்டநிலங்களைக் குடிகள், மராமத்து முதலியவைகளைச் சுவான்தாரர் செலவிலாவது தங்கள்செலவிலாவது செய்து, ஏரு, தழை, கிடை, முதலிய செய்நேர்த்திகள் செய்து, நிலங்களுக்குத்தகுந்த ஏர் வைத்துக்கொண்டு சொந்தத்தில் பாடுபட்டு, மிராசுதாரர்களிடம் விசுவாசத்துடன், சாகுபடி



செய்யவேண்டும். மிராசுதாரர்கள், குடிகளுக்கு கொடுக்கவேண்டியபாகத்திலாவது, கடனாகவாவது, காலத்தையும், கிராமவழக்கத்தையும் அனுசரித்து முன்னாடியே வேண்டியவிதைகள் முதலியவைகளைக்கொடுத்து அடிக்கடி சாகுபடிகளைக்கவனித்து காரியஸ்தர்களிடம் உண்மையாய்ப் பூராநம்பிக்கை வேண்டும். பரஸ்பர ஸமன்னியிலும் ஒருவருக்கும்கஷ்டமுண்டாகாமலும், கிராமவழக்கப்படி கிராமஅதிகாரிகள் வாரம்பிரித்து, அந்தந்தப்பசலிகளில் சம்பிசாதக்கணக்குகளைத்தீர்க்கும்பக்ஷத்தில், எல்லாவற்றிலும், அதிகலாபமும், இருதிறத்தாருக்கும் சௌகரியமும் கிடைக்கும்.

சாகுபடி முடிந்தவுடன் சாகுபடிக்கணக்கும், மகசூல்தயாரானவுடன் புள்ளிக்கணக்கும், களம்முதலானவுடன் (அடைவாமுல்பட) களம்முதற் கணக்கும் வாரம்பிரித்தவுடன் வருவகணக்கு கிராமாதிகாரிகள் தயார்செய்து மேலாவுக்கு அனுப்பவேண்டியதுரொம்பவும் முக்கியமானவிஷயம்,

வாரம்பிரிப்பதற்குமுந்தி ஒருவரும் களம்முதல் நெல்லைப் பற்றிக்கொள்ளக்கூடாது. கணக்குத் தீர்ந்தவுடன் வாரச்சிட்டை த்துசெய்யவேண்டும். வாரம்பிரிப்பதில் வைக்கோல்முதலியவைகளுள்படப்பிரிக்கவேண்டும். வாரம்பிரித்தவுடன் மிராசுதாரர்முதலில் கடனாகக் கொடுத்தவைகளைக் குடிவாரத்திலிருந்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

மிராசுதாரருடைய மேல்வாரதானியங்களைத் திரிசகளுக் குத்தகப்படி வேண்டிய விலைகளைக்காயவைத்துப்பக்கோபஸ்து செய்தபிறகுதான், விற்றுமுதல் செய்தல், களஞ்சியத்தில்சேர்த்தல் முதலியவைகளு செலவுபட்டுவாடா செய்ய வேண்டும்.

## நான்காவது பிரிவு

ஜமீன் கிராமங்கள்;— இவர்களுடைய கிராமங்கள் அநேகமாய் மேல்வாரபாத்தியம் தங்களுக்கும், உளவடைபாத்தியம் குடிகளுக்குமாக ஏற்பட்டு மதிராஸ் 1908 வருஷத்திய 1வது ஆக்ட்டு அனுஷ்டானத்தை உடையதாக இருக்கிறது.

இவர்கள் ஜமீன்தார்களிடம், நெடுநாள் அனுபோகமுள்ளவர்களாயும், பெரிய பரீக்ஷைகளில் தேறி சிவில், கிரிமினல், ரிவினியூ முதலிய சட்டங்கள் தெரிந்தவர்களாயும் தேர்ந்தெடுத்து தகுந்த சம்பளங்கொடுத்து தங்கள் கிராமங்களுக்கு ஏஜெண்டாக நியமித்து வருகிறபடியால் அவ்விஷயங்களை அதிகமாகச் சொல்லவேண்டியது அவசியமில்லை.

என்றாலும், கிராமச்சீர்திருத்தங்களையும், அனுஷ்டிக்கவேண்டிய முறைகளையும் கொஞ்சம் கவனிக்கவேண்டியதவசியம்.

சில இடங்களில் ஜமீன்தார் மிட்டாதாரர்களுடைய அபிப்பிராயத்தின் பேரில், அவர்கள் சௌகரியத்தை அனுசரித்து, கிராமசிப்பந்திகளை நியமித்தல், நீக்கிவைத்தல், பரதருப்புசெய்தல் முதலிய அதிகாரங்களைக் கவர்ன்மெண்டார் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில், சிப்பந்திகளின் சம்பளங்கள்கூட, ரிவினியூ டிபார்ட்டுமெண்டில் கொடுத்துவருகிறார்கள்.

சிப்பந்திகளில், கர்ணங்கள், கவர்ன்மெண்டு மூலமாய்ச்சம்பளம் பெற்றுக்கொள்வதின் தைரியத்தினாலோ அப்பீல் முதலிய சிபார்சுகளின் உண்மையானவிஷயங்கள் தெரியாததாலோ, ஜமான்தார்களின் கவனக்குறைவினாலோ, [illegible]பும் நடவடிக்கைகளாவன.



புதிதாய் சர்வே செய்யப்பட்டு, அனுபோகப்படி அளவுகள், ஸ்கெட்சு, பிளான், அடங்கல், முதலியவைகள் ஒழுங்காக இல்லாத கிராமங்களில்; பூர்த்தியையும் ஸ்தலத்தையும் கண்டுபிடிக்கக்கூடிய பழையபைமாஷ், அடங்கல் அல்லது ஒழுகு, முதலிய கணக்குகளைக்கொண்டு அத்துக்களை ஸ்தாபிக்கவும், தகரார்களைத்தீர்க்கவும், அத்துக்கள் அழிந்து ஏற்பட்டுப்போவதால் சந்தேகமுண்டாகி, அவைகளை ஒழுங்குபடுத்த தற்கால அனுபோகத்தையும், கர்ணம் சொல்லும், விஷயங்களையுங்கம்பி ஸ்தாபித்தாலும் பிறகு அவற்றைமாற்றுதற்கும், புரட்டுவதற்கும், இடமுண்டாகிறது.

ஒருசெண்ட் நிலத்திற்காவது ஒருவரப்பிற்காவது தகரார் உண்டானால், ஒருபிளாக்கின் அத்தை எல்லையாகவைத்துக்கொண்டு, மறுபிளாக்கை, [illegible] அளந்து, ஒழுங்குபடுத்துவதில்; மேல் அதிகாரிகள் படும் துன்பமும், அவற்றால்உண்டாகிறசெலவும் மிச்சமேயொழிய, நல்லதோ, கெட்டதோ, கர்ணம் சொல்வதே உறுதியாகிறது. பெரியதகரார்கள் ஏற்பட்டுக் கோர்ட்டுக்குப்போனால், கம்மிஷனர் செய்வதே தீர்ப்பாகிறது. இவைகளினால் அநேகவிதமான நஷ்டங்களும் துன்பங்களும் உண்டாகின்றன.

பயிர்வாரி கிராமங்களில் கர்ணம் சாகுபடிக்கணக்கு உடனுக்குடன் கொடுக்காததால், பயிர்களைச் சுற்றிப்பார்த்து அதிகத்தீர்வைக் கொண்டுவரவேண்டிய இனங்கள் மறைந்து விடுகிறது. இவற்றில் தண்ணீர்த்தீர்வையும் அடங்கியது.

பட்டாமாறுதல், வார்சுப்பட்டி, முதலிய விஷயங்களுக்கும், கவர்ன்மெண்டைப்போல், ரூல்கள் ஏற்பட்டிருந்தாலும், நிலம்

அனுபோகமில்லாதவன் பேரிலும், நீண்டகாலத்திற்குமுன் இறந்தவன் பேரிலும், வெகுநாட்களுக்குமுன் பாகம் பிரித்துக்கொண்ட குடும்பங்களில் பாகப்பிரிவினை செய்துகொள்ளுமுன்னிருந்தபடியே ஒருவன் பேரிலும், பட்டா இருப்பதால், கிஸ்தி பாக்கிக்கு நிலஜப்திதவிர சகஜவசூலுக்கு மார்க்கமில்லை. அவ்விதம் நிலங்களை ஜப்திசெய்து, ஏலம்போட்டுச் சுவான்தாரயில் ஏலமெடுத்துபட்டாவைகணக்கில்மட்டில் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இவற்றால் அந்நிலங்களை அனுபவிக்கிற குடிகளுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. எப்படியென்றால், சிலபாகம் பயிர்க்கம்பி என்றும், சிலபாகம் நீர்வைக்கம்பியென்றும், சிலபாகம் தரிசென்றும், நீக்குவிடுகிறார்கள். இவைகளை மேல்மனுஷாள் கவனிக்கச் சாத்தியப்படாததால் விட்டுவிடவேண்டியதாயிருக்கிறது.

மேற்கண்ட அபிட்டங்களினால் நஷ்டமுண்டாகாமற் செய்துகொள்ள விரும்பிய சுவான்தார்கள் செய்யவேண்டியதென்னவென்றால்;—ஒழுங்காகச் சர்வே செய்யப்படாமலிருக்கிற கிராமங்களை; செலவைக்கவனிக்காமல் சர்வே செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களை நியமித்து, பழையகணக்குகளை வைத்துக்கொண்டு, தற்காலபூமியின் சொரூபத்தையும், விஸ்தீரணத்தையும், அனுபோகத்தையும் அனுசரித்து சுத்தமாகஅளந்து சர்வேசெய்து, கணக்கு முடித்துப்பட்டாக்கொடுத்துஒழுங்குபடுத்திக்கொண்டால் எவ்விதக்கஷ்டங்களும், நஷ்டங்களும் உண்டாகாமலிருக்கும்.

கிராமங்களில் தர்க்காஸ்து, புறம்போக்கு முதலியவைகள் இருந்தால்; கிராம சௌகரியத்திற்கு வேண்டிய பூமிகளை

83



விலக்கிப்பாக்கி நிலங்களைத்தர்க்காஸ்து மூலமாகவாவது வேறுவிதமாயாவது உடனுக்குடன் அடமானஞ்செய்து பட்டா கொடுத்துக் குடிகளுக்குக்கூடியவரையில் உதவிசெய்து பைசல் செய்தால், தீர்வையைச் சகஜமாய் அதிகப்படுத்தி லாபம் அடையலாம்.

ஏரி, குளம் முதலியவைகளை உடனுக்குடன் மராமத்து செய்து ஜலக்கஷ்டமில்லாமல் செய்தால், பயிர்வாரிக்கிராமங்களில் தண்ணீர்த்தீர்வையை அதிகப்படுத்தலாம்.

கிஸ்திவசூலிக்கும் விஷயத்தில் படிப்படியாய் எல்லாரும் கூடியவரையில் சிரத்தையெடுத்துக்கொண்டு, அந்தந்தப்பசலிபாக்கிகளை அந்தந்தப்பசலியிலேயே பைசல் செய்துவிடவேண்டியது.

சம்மேரி, சிவில், கிரிமினல், ரிவினியூ, முதலிய விவகாரங்கள் உண்டாகாமல், கூடியவரையில் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

கவர்ன்மெண்டார், ஜமீன்தார் மிட்டாதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும், கௌரவத்தையும், கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் ஜமீன்தார் முதலியவர்கள் தங்கள் கிராமங்களை, அவசியமானால், மேலான கவர்ன்மெண்டு அதிகாரிகள்மூலமாகச் சீர்திருத்திக்கொண்டு, நேரிலாவது தகுந்த மனேஜர்கள் மூலமாவது கவனித்தால் நஷ்டமில்லாமலும் நல்ல விர்த்தியுடனும் சௌகரியமாக இருக்கலாம் என்பது திண்ணம்.

67733

8-11-96
19-3-97

முற்றிற்று